பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 14 வியாழக்கிழமை 28.03.2019 கதிர் 144

### இனி இது ரகசியம் அல்ல!

வழமையாக ஆளுநர் பதவி என்பது சம்பிரதாயபூர்வ பொறுப்பு. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு சம்பிரதாயபூர்வமான தலைவர் அவர்தான். தேர்தலில் தெரிவான சபை இல்லாமல் போகும் போது மட்டும் அதை நிர்வகிக் பக்கம் 02 »



## அதிகாரங்களை மத்திக்கு தாரை வார்க்கவேண்டாம்

### ஆளுநரிடம் கோருகிறார் தவராசா

யாழ்ப்பாணம், மார்ச் 28

மாகாண சபையின் அதிகாரங்களை முழுமையாக்கி மேலும் செழுமைப்படுத்தப் படுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் மாகாண சபையின் பக்கம் 11 »

## வேட்டியும் பெனியனும் அணிபவர்தான் ஜனாதிபதியாவார் என்கிறார் வெல்கம

### அப்படியானால் ரணிலும்,கோட்டாபயவும் அவுட்!

வேட்டி - பெனியன் அணியும் ஒருவரே நாட்டின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப் பட்டு வெற்றி பெறுவார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பக்கம் 11 »

## சுமந்திரன் எம்.பியாக இருக்கும் வரையில் அரசியல் கைதிகளுக்கு விடுதலை இல்லை

### முன்னாள் போராளிகளுக்கும் நிம்மதி கிடையாது என்கிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு, மார்ச்28

தாங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் வரை அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட மாட்டார்கள்.முன்னாள் போராளிகளையும் நிம்மதியாக இருக்க நீங்கள் விடமாட்டீர்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கடுமையாகச் சாடியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் பக்கம் 11 »

# திருட்டுத்தனமாகவே ஜெனீவாவில் தீர்மானத்துக்கு இணை அனுசரணை

## ஒருபோதும் ஏற்கமாட்டேன் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 28

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஜெனீவாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திருட்டுத்தனமாகவே கையொப்பமிட்டுள்ளார். எனவே, இணை அனுசரணை வழங்கப்பட்டுள்ளதை ஏற்கமுடியாது. அதை நான் நிராகரிக்கின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தார். பக்கம் 11 »



## இளைஞனை காணவில்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 28

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள உணவகத்தில் பணியாற்றிய இளைஞனை காணவில்லை எனத் தந்தை முறைப் பக்கம் 11 »

## திருக்கேதீஸ்வரம் வளைவு உடைப்பு; வவுனியாவில் நேற்று உண்ணாவிரதம்



வவுனியா, மார்ச் 28

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அலங்கார வளைவு உடைக்கப்பட்டமையைக் கண்டித்து வவுனியாவில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் பக்கம் 11 »

## தெற்கிலும் கூட்டமைப்பு அரசியலில் ஈடுபடலாம்!

### கூறுகிறார் குமார வெல்கம



கொழும்பு, மார்ச் 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு, வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் அரசியல் செயற்பாடுகளில்ஈடுபடமுழுமையானஉரிமை உள்ளது என்று மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றையடுத்து ஊடகங்களுக்குக் பக்கம் 11 »

## காணாமற்போனோருக்கு வழங்கும் கொடுப்பனவை ரூ. 10,000 ஆக்குக!

### சபையில் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 28

காணாமல்போனோரின் உறவுகளுக்கு அரசு வழங்குவதாக அறிவித்துள்ள 6000 ரூபா கொடுப்பனவை 10,000 ரூபாவாக அதிகரிக்கவேண் பக்கம் 11 »

## ஐ.தே.கவில் ரணில்தான் ஜனாதிபதி வேட்பாளர்!

### மீண்டும் அறிவிப்பு விடுத்தார் பொன்சேகா



கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராகக் கள பக்கம் 02 »

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் மூக்குடைபட்டார் வடமாகாண ஆளுநர்

### சுரேன் ராகவன் தனது கருத்தைத் திரிவுபடுத்தியுள்ளார் என மிச்செல் பச்சலெட் அம்மையார் கடும் அதிருப்தி




ஜெனீவா, மார்ச் 28

கடந்த மார்ச் 20 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பக்கம் 02 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு

kalaikkathirnews@gmail.com

https://kalaikathir.online

# யாழ். சிறையில் இருக்கும் மகனுக்கு வாழைப்பழத்துக்குள் ஹெரோயின்!

## தாயார் சிறைக் காவலர்களால் கைது

போதைப்பொருள் குற்றச்சாட்டு உள்ளிட்ட பல வழக்குகளில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனுக்கு வழங்குவதற்காக ஹெரோயின் போதைப்பொருளை வழைப்பழத்துக்குள் மிக நுட்பமாக மறைத்துக் கடத்திச் சென்ற தாயார் சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் அகப்பட்டார்.

மகனை நல்வழிப்படுத்துவதற்கு முன்மாதியாக இருக்கவேண்டிய தாயார் இவ்வாறு நடந்துகொள்ளலாமா? போதைப்பொருள் குற்றச்சாட்டில் ஏற்கனவே சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அவருக்கு மீளவும் போதைப்பொருளை எடுத்துச் சென்று வழங்குவது மகனைக் குற்றம் செய்யத் தூண்டுவதாகவே உள்ளது என்று எச்சரித்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல், சந்தேகநபரான வயோதிப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நீதிமன்றின் உத்தரவில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராகச் சைக்கிள் திருட்டுக் குற்றச்சாட்டு வழக்குகள் பல நிலுவையில் உள்ளன.

சந்தேகநபரை கடந்த திங்கட்கிழமை பார்வையிடச் சென்ற அவரது தாயார், புகையிலை நறுக்குக்குள் சிறியளவு ஹெரோய்ன் போதைப் பொருளைச் சுற்றி அதனை வாழைப்பழத்துக்குள் நுட்பமாகச் செலுத்தி எடுத்துச் சென்றுள்ளார். வாழைப்பழத்தைச் சோதனை செய்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் போதைப்பொருள் சுற்றப்பட்ட புகையிலை நறுக்கை மீட்டுள்ளனர்.

அதனால் சந்தேகநபரின் தாயாரைக் கைது செய்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், அவரை யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் விசாரணைகளின் பின்னர், வயோதிப் பெண்ணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முற்படுத்தினர்.

இதன்போதே வயோதிப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மகனைப் பார்க்கச் சென்ற தாயார் ஒருவர், உணவுப் பொதியில் கஞ்சா போதைப்பொருளை எடுத்துச் சென்றார் எனக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவர் அடுத்த தவணையின்போது குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் 10 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பைச் சாடும் அருட்தந்தை சக்திவேல்!

ஜெனீவா வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவோம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அரசை மிரட்டுவது போன்று தமிழ் மக்களுக்குக் காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றாரே தவிர, உண்மையிலேயே அரசை மிரட்டவில்லை என அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏனெனில் கடந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது, 10 கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவளித்தன. அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், அப்போது கூட்டமைப்பினர் தெரிவித்திருந்தனர். எனினும் தற்போது வரை அவ்வாறு எந்தவொரு கோரிக்கைகள் தொடர்பிலும் வெளிப்படுத்தப்படவோ, நிறைவேற்றப்படவோ இல்லை. ஆனால் இன்னமும் கூட்டமைப்பு அவர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றது - என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் பொறுப்பு ஆளுநரிடம் வரும்.

இங்கு மட்டுமல்ல. இந்தியாவிலும் மாநிலங்களில் இதே மாதிரித்தான்.

அங்கும் முன்னைய அரசியல்வாதிகளை ஆளுநராக நியமிக்கும் வழமை உண்டு. ஆனால் ஆளுநர் பதவி ஏற்றதும் அவர் நடுநிலையாளராகி விடுவார் - கட்சி சார்ந்தவர், சபாநாயகரானதும் கட்சி உறுப்பினராக நடக்காத மாதிரி, ஆளுநராகின்றவரும் கட்சி அரசியலில் இருந்து வெளியே வந்துவிடுவார். அதுதான் பொதுவான இயல்பு. இந்தியாவில் எல்லாம் அப்படித்தான்.

இங்குதான் நிலைமை தலைகீழ். அரசியல்வாதிகளையும், முன்னாள் இராணுவ அதிகாரிகளையும் கூட மாகாணங்களில் அரசியல் செய்வதற்கென்றே அப்பதவியைக் கொடுத்து அனுப்புகின்றார்கள்.

முன்னர் நடுநிலையாளர்களாக, சிவில் அதிகாரிகளாக, பொதுச் சேவையாளராக இருந்தவர்களைப் பிடித்து ஆளுநர் பதவியைக் கொடுத்து அனுப்பினால் அவர்கள் கூட இந்தப் பதவியை ஏற்றதும் அரசியல் செய்யத் தொடங்கி விடுவர் என்ற தலைகீழ் நிலைமை இங்கு.

உதாரணத்துக்கு வடக்கு ஆளுநர் ஒரு சாம்பிள். பதவியை ஏற்றோமா, மக்களுக்கு நான்கு நல்ல விடயங்களைச் சத்தம் சந்தடியின்றிச் செய்தோமா என்று பணி புரியாமல், அவரும் அரசியல் செய்யத் தொடங்கிவிட்டார்.

ஜெனீவா விவகாரத்தை வைத்து அவர் குழப்பிய குழப்பே, அவரது அரசியல் கற்றுக் குட்டித்தனத்துக்கு ஒரு நல்ல 'சாம்பிள்'!

ஜனாதிபதியின் பிரதிநிதியாக அங்கு போனவர். அதற்கிடையில் ஏதோ வடக்கு மக்களின் கருத்து நிலைப்பாட்டைச் சுமந்து செல்லும் பொறுப்புத் தமக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பது போல அவர் கடைவிரித்தமை நகைச்சுவையின் உச்சம்.

அங்கு போய் வந்து அவர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒரு தினுசில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் மாநாடு வேறு ராகத்தில் ஒலித்தது. நன்றாக அரசியல் பண்ணுகின்றார் என நினைத்துக் கொண்டேன்.

"குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இராணுவத்தினர் குற்றமிழைத்திருந்தாலும் விசாரணை நடத்தித் தண்டிக்கப்பட்டாக வேண்டும்." - என்று குறிப்பிட்டு அந்த வாதத்துக்கு 'பிளஸ் பொயிண்ட்' ஆக இராணுவத் தளபதியின் கருத்தைக் கூட ஆதாரமாக முன்வைத்தார். - யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் மாநாட்டில்.

ஆனால், "ஜெனீவாவில் இப்போது இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தையே தூக்கிக் கடாசிவிட்டேன், நான் அதனை ஏற்கவேயில்லை" - என்ற சாரப்பட அவரை இந்தப் பதவிக்கு நியமித்து, பின்னர் ஜெனீவாவுக்கு அனுப்பிய அவரின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது அறிவித்திருக்கின்றமை, ஜெனீவா பேரவைக் கூட்டம் தொடர்பில் அவரின் பங்குபற்றுதலின் விளைவை - அது பற்றி ஆளுநரின் கருத்து நிலைப்பாட்டை - முற்றாகக் கேள்விக்குறியாக்கி விட்டது.

ஏற்கனவே, வடக்கில் புதிது புதிதாக பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது பற்றிய அவரது கொழும்புப் பத்திரிகைப் பேட்டி சர்ச்சையைக் கிளப்ப, அது பிழையான அர்த்தத்தில் பிரசுரமாகி விட்டது என்று ஒரு சாக்குப் போக்குச் சொல்ல வேண்டியதாயிற்று.

இப்போது ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்து விட்டு வந்து, வடக்கு ஆளுநர் தெரிவித்த கருத்துக்கள் அடுத்த சுற்றுப் பிரச்சினையைக் கிளப்பி விட்டிருக்கின்றன.

"இலங்கை தொடர்பாக ஆணையாளர் ஜெனீவா பேரவையில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சில தவறுகள் உள்ளன. அதனை ஆணையாளரே எங்களிடம் ஒப்புக் கொண்டார். இத்தகைய விடயங்களில் இனிமேல் சிரத்தையாகச் செயலாற்றும்படி தனது அலுவலக அதிகாரிகள் இருவரைத் தாம் பணித்திருக்கின்றார் என்றும் ஆணையாளர் எங்களிடம் கூறினார்." - என்ற சாரப்பட ஆளுநர் சுரேன் ராகவன் கருத்து வெளியிட்டார் என்று அப்பத்திரிகை தெரிவித்தது.

இதனையே மனித உரிமைகள் ஆணையாளர் அடியோடு மறுத்திருக்கின்றார்.

இப்போது, இந்த விடயத்திலும் கொழும்பு ஆங்கிலத் தினசரி தமது கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு பிரசுரித்துள்ளது என ஆளுநர் தரப்பில் மற்றொரு 'சமாளிபிக்கேஷன்' முன்வைக்கப்படுமோ என்னவோ தெரியவில்லை.

சுரேன் ராகவன் இப்போது வடக்கு ஆளுநர் பதவிக்கு வர முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பொறுப்பாளராக இருந்தவர். ஆகவே அடிக்கடி ஊடகங்கள் மீது தவறைச் சுமத்தி விடயத்திலிருந்து தப்பிக் கொள்ளும் பாங்கை அவர் கைக்கொள்ள முடியாது, கைக்கொள்வது தவறு என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இந்த ஜனாதிபதியின் தற்போதைய பதவிக் காலத்தின் அந்தத்தில் இந்த ஆளுநர் நியமனம் சுரேன் ராகவனுக்குக் கிடைத்திருக்கின்றது.

இந்த அருமையான வாய்ப்பை - அதிகம் அரசியல் செய்வதைத் தவிர்த்து - தன்னை முன்நிறுத்தி, விவகாரங்களை ஆரவாரம் பண்ணிக் கையாளாமல், சத்தம் சந்தடியின்றி காரிய மாற்றி, விடயங்களைச் சிறப்பாக ஒப்பேற்றினால் காலம் காலமாக அவர் சேவை போற்றப்படும்.

அதைவிடுத்து, அடுத்த தடவையும் மைத்திரிபால ஜனாதிபதியாவதற்கு வசதியாக இங்கு 'ஏஜெண்ட்' வேலை பார்ப்பதே தமது விசுவாசக் கடமை என்று அவர் கருதி, அரசியல் பண்ணுவாரானால் அதன் பெறுபேறு அவரது மனதுக்கு உகந்ததாக அமையாது என்பது மட்டும் நிச்சயம்.

வடக்கு மக்களின் மனநிலை அவருக்குப் புரியவில்லையோ, என்னவோ...! - மின்னல் -

## ஐ.தே.கவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிறங்கவேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

களனியில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்தும், தேசிய அரசு அமைப்பது தொடர்பிலும் சரத் பொன்சேக்காவிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர்.

இவற்றுக்குப் பதிலளித்த அவர் கூறியவை வருமாறு:-

ஐ.தே.கவின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே செயற்பட்டுவருகிறார். ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக அவரே களமிறங்க வேண்டும். பிரதமர் ரணிலை நிச்சயம் நாம் வெற்றிபெறவைப்போம்.

அதேவேளை, தேசிய அரசு உதயமாவதற்கு நான் எதிர்ப்பை வெளியிடவில்லை. ஆனால், காலைவாரிய தரப்பினருடன் மீண்டும் இணையக்கூடாது. இரவில் விழுந்த குழியில், பகலில் விழக்கூடாது என்பதுதான் எனது நிலைப்பாடாகும் - என்றார். (ஐ)

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவுன்ஸிலில் பங்கேற்க வந்திருந்த இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவொன்றுடன் தான் அண்மையில் ஐ.நா. அமைப்பின் அலுவலக அறிக்கை தொடர்பாக மேற்கொண்ட கலந்துரையாடலை வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் செவ்வாய்க்கிழமையன்று பத்திரிகை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் தவறான விதத்தில் எடுத்துரைத்துள்ளார் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார் கவலை வெளியிட்டுள்ளார்.

டெய்லி மிரர் ஆங்கில நாளேட்டில் கடந்த திங்கட்கிழமை வெளியான ஒரு செய்தியில், இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவின் ஓர் அங்கத்தவராக ஜெனீவாவில் பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநரான கலாநிதி சுரேன் ராகவன் கருத்துத் தெரிவிக்கையில் 'இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையில் உள்ள சில விடயங்களை எவ்வகையிலும் ஏற்றுக்கொள் முடியாது' என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறினார் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இதன் பிறகு 'அதிக பொறுப்புணர்ச்சி மற்றும் எச்சரிக்கையுடன்' செயல்படுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அவருடைய இரு முக்கிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார் எனவும் ஆளுனர் ராகவன் கூறினார் என டெய்லி மிரர் பத்திரிகையின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் வட மாகாண ஆளுநரின் மேற்படி கூற்றுக்களை முற்றாக மறுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பச்சலெட் அம்மையார் , 'இந்த இரு கருத்துக்களில் எதுவும் உண்மையானதல்ல' என வலியுறுத்தியுள்ளார்.

'ஒன்றில், ஆளுநர் கூறியதை (டெய்லி மிரர்) பத்திரிகை தவறாக புரிந்திருக்கவேண்டும். அல்லது நான் கூறியதை ஆளுநர் தவறாக விளங்கியிருக்கவேண்டும் - அல்லது தவறாக என்னை மேற்கோள் காட்டியிருக்கவேண்டும்' என ஆணையாளர் விளக்கம் அளித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆணையாளர் பச்சலெட், மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குத் தான் சமர்ப்பித்த எழுத்து மற்றும் வாய்மூல கூற்றுக்கள் விடயத்தில் தான் உறுதியாக உள்ளார் என்றும், அந்தக் கூற்றுக்கள் இலங்கையின் தற்போதைய நிலைமையை மிகச் சரியாகப் பிரதிபலிப்பதாக தான் நம்புகிறார் எனவும் கூறினார்.

'இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவினருடன் மேற்கொண்ட சம்பாஷனையில் நான் கூறிய கருத்துக்கள் திரிக்கப்பட்டுள்ளமை என்னை மிகவும் கவலை கொள்ளச் செய்துள்ளது' எனக் கூறிய ஆணையாளர், ஜெனீவாவில் நடைபெறும் ஐநா மனித உரிமைகள் கவுன்ஸிலில் கூறப்படும் விடயங்களைத் தவறாக எடுத்துரைசெய்யும் போக்கை இலங்கைப் பத்திரிகைகள் தொடர்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

சாதாரண வழமையின் பிரகாரம் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையின் பிரதிகளை, அது பிரசுரிக்கப்படுவதற்கு முன் கவுன்ஸிலின் 47 அங்கத்தவ நாடுகளினதும் வேண்டுகோளினடிப்படையில் இலங்கை அரசுக்கும் பகிரப்பட்டுள்ளது. அறிக்கையை இறுதி மாற்றங்களுடன் பிரசுரிக்கப்படுவதற்கு முன் இலங்கை அரசின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டமையுடன், கடந்த பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முக்கிய உயர் அதிகாரிகளைக் கொண்ட பிரிதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அவர்கள், இலங்கை அரசின் பல உயர் அதிகாரிகளைச் சந்தித்து அறிக்கையின் விடயங்கள் தொடர்பாக மிக விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஆணையாளர் பச்சலெட், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 30/1 (2015) மற்றும் 34/1 (2017) தீர்மானங்களை செயற்படுத்த இலங்கை அரசுக்கும் அதன் மக்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கத் தானும் தனது அதிகாரிகளும் முற்றாக அர்பபணிப்புடன் இருப்பதாக உறுதியளித்தார். அத்துடன் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு தீர்மானத்தின் (40/1) போது, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை அரசு வாக்களித்த சில விடயங்களை முழுமையாகச் செயற்படுத்த மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், 2009 ஆண்டு முடிவுக்கு வந்த மோதல்களின் போது நடைபெற்ற பெரும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் நியாயம் வழங்குதல் தொடர்பான தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தப்பட்ட முன்னெடுப்புக்களில் இலங்கை அரசு மீள்கவனம் செலுத்த வேண்டும் என்றும், என்ன நடந்தது என்ற விடயம் தொடர்பான உண்மைகளை நிலைநிறுத்தவும், நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் தேவையான தமது பொறுப்புக்களை நிறைவேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தினார். (ஐ)

# கொடிகாமம் வடக்குப் பகுதியில் இரண்டு குடும்பங்களுக்கு வீடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் இரண்டு குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹெட்டியாராட்சியின் பங்களிப்புடன் நடைபெற்றது.

திரு திருமதி வதனி மோகன்சங்கர் தம்பதிகளின் 25 ஆம் ஆண்டு திருமண நாளை முன்னிட்டு தலா 15 லட்சம் ரூபா நிதியில் கொடிகாமம் வடக்கில் அமைக்கப்பட்ட 2 வீடுகளும் சுழிபுரத்தில் அமைக்கப்பட்ட 1 வீடும் திறப்பு விழா செய்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஆணையாளர் வை.மோகன்தாஸின் சிபார்சின் பேரில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியின் முழுப் பங்களிப்புடன் அடிப்படைத் தேவைகளான குழாய்க் கிணறு, மலசல கூடம் ஆகியவை அமைக்கப்பட்டு நிதி வழங்கிய திரு திருமதி வதனி மோகன் சங்கர் தம்பதிகளால் பயனாளிகளிடம் அவை கையளிக்கப்பட்டன.

(ஐ)



## கேணல் ரத்னபிரியவுக்கு விஸா வழங்க மறுத்துவிட்டது சுவிஸ்



கொழும்பு, மார்ச் 28

முன்னாள் இராணுவ அதிகாரி கேணல் ரத்னபிரிய பந்து ஜெனிவாவுக்குச் செல்வதற்கு சுவிட்சர்லாந்து அரசு விஸா வழங்க மறுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் சிறிலங்கா பொதுஜன பெரமுன நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியானது.

அண்மையில் நடந்த ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸின் கூட்டத்தின் பக்க அமர்வு ஒன்றில் பங்கேற்க, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிவில் அமைப்பு ஒன்று கேணல் ரத்னபிரிய பந்துவுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால், கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம், அவருக்கு விஸா வழங்க மறுத்து விட்டது.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் அழகப் பெரும மற்றும் றோகித அபேகுணவர்த்தன ஆகியோர் இதுபற்றி கருத்து வெளியிட்டபோது, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அமெரிக்கா விஸா மறுத்ததன் அடிப்படையில் கேணல் ரத்னபிரிய பந்துவுக்கும் விஸா மறுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

வன்னியில் சிவில் பாதுகாப்புப் ப்டையின் கட்டளை அதிகாரியாக இருந்த கேணல் ரத்னபிரிய பந்து, கடந்த ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்டார். இதையடுத்து அவர் இராணுவத்தில் இருந்து விலகியிருந்தார்.

வடக்கில் மாற்று அரசியலுக்குத் தலைமை தாங்கத் தயாராக இருப்பதாக அண்மையில் அவர் ஒரு தொலைக்காட்சி செவ்வியின்போது கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கு, கிழக்கில் நாமும் களமிறங்குவதற்குத் தயார்!

## தமிழரசுக் கட்சிக்கு மனோ பதிலடி

கொழும்பு, மார்ச் 28

இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள ஏழு மாகாணங்களில் எங்கு வேண்டுமானாலும் தேர்தல்களில் போட்டியிடலாம். இதை நான் வரவேற்கிறேன். அதேவேளை, நாமும் வடக்கு, கிழக்கில் எமது கட்சிக் கிளைகளை அமைக்கலாம். அங்குள்ள பல்வேறு அமைப்புகளுடன் கூட்டாகவோ, தனித்தோ செயற்படலாம்.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

'இனிவரும் காலங்களில் வடக்கு, கிழக்குக்கு வெளியில் – குறிப்பாகக் கொழும்பில் – தேர்தல்களில் போட்டியிடுவது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீவிரமாகப் பரிசீலிக்கின்றன' என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அறிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் இடையில் சிறந்த அரசியல் புரிந்துணர்வு இருப்பதால், இரு தரப்புகளினதும் கோட்டைகளில் ஒருவருக்கொருவர் போட்டி அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற இணக்கம் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தது எனக் கூறப்பட்டது.

இந்நிலையில், மாவை. சேனாதிராசா எம்.பியால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு குறித்து கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியிலும், சமூக வலைத்தளங்களிலும் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழரசுக் கட்சியின் இந்த அறிவிப்பு குறித்து தனது நிலைப்பாட்டை விளக்கும் வகையில் தனது முகநூலில் அறிவிப்பொன்றை பதிவிட்டுள்ளார் அமைச்சர் மனோ கணேசன்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு: –



தமிழரசுக் கட்சி கொழும்பில் தேர்தல் அரசியலில் ஈடுபடப் போவதாகவும், இதுபற்றிய என் கருத்து என்ன என அநேகர் கேட்கிறார்கள். நான் என்ன சொல்ல? வாங்கோ, வாங்கோ என்றுதான் சொல்வேன்!

இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு – கிழக்குக்கு வெளியே உள்ள ஏழு மாகாணங்களில் எங்கு வேண்டுமானாலும் தேர்தல்களில் போட்டியிடலாம். இதை நான் வரவேற்கிறேன்.

முழு இலங்கையைத் தாய்நாடாக ஏற்றுக்கொண்டு, தமிழீழ நிலைப்பாட்டை எப்போது தமிழரசு கைவிட்டதோ, அப்போதிருந்து இந்த உரிமை அந்தக் கட்சிக்கு இயல்பாக இருக்கின்றது.

இதுபற்றிய எனது இந்தக் கருத்தை இதற்கு முன்னமே பலமுறை நான் அறிவித்திருக்கின்றேன்.

ஜனநாயகக் கட்சி கிளைகளை யாரும் இந்த ஜனநாயக நாட்டில் எங்கும் அமைக்கலாம்.

நாமும் வடக்கு, கிழக்கில் எமது கட்சி கிளைகளை அமைக்கலாம். அங்குள்ள பல்வேறு அமைப்புகளுடன் கூட்டாகவோ, தனித்தோ செயற்படலாம்.

இதுதான் ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய அமைப்புகளின் நிலைப்பாடு – என்றுள்ளது. (ஐ)

## வயது குறைந்த இளைஞருக்கு மதுபானம் விற்றவர் கைதானார்

வவுனியா, மார்ச் 28

வவுனியாவில் சிறுவனுக்கு மதுபானம் விற்பனை செய்த மதுபான நிலையத்தின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் போதை ஒழிப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் கண்டி வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்துக்குச் சென்ற 21 வயதுக்குக் குறைந்த இளைஞன் ஒருவருக்கு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இளைஞனை அழைத்துச்சென்று வயதை உறுதிப்படுத்திய போதை ஒழிப்புப் பொலிஸார், மதுபான விற்பனை நிலையத்தின் முகாமையாளரைக் கைது செய்து வியாபார நிலையத்தையும் மூடினர். (ஐ - 100)

## இராணுவச் சிப்பாய் தூக்கிட்டு தற்கொலை!

கொழும்பு, மார்ச் 28

குருவிட்ட இராணுவ முகாமில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

முகாமின்தங்கும்விடுதியின் கூரையில் கட்டப்பட்ட கயிற்றில் தொங்கி அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்புறுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

தற்கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பில் குருவிட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# டுபாயிலிருந்து நதீமால் பெரேரா நேற்று அதிகாலை நாடு கடத்தல்

கொழும்பு, மார்ச் 28

போதைப்பொருள் கடத்தல்காரரான மாகந்துர மதூஷுடன் டுபாயில் வைத்து கைதுசெய்யப்பட்ட பாடகர் அமல் பெரேராவின் மகன் நதீமால் பெரேரா, சிறைச்சாலை அதிகாரி லலித் குமார ஆகியோர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று அதிகாலை டுபாய் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்றில் நாடு திரும்பினர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

நதீமால் பெரேரா, லலித் குமார ஆகியோரிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள மாகந்துரே மதூஷ், பாடகர் அமல் பெரேரா உள்ளிட்டோர் இன்று அந்நாட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

(ஐ)

SAAMSON Experts in English Training
இன் மூன்று மாத சனி, ஞாயிறு
ஆங்கிலப் பயிற்சிநெறி 30.03.2019 சனி
காலை : 08 - 10 மாலை: 03 - 05
3 மாத பயிற்சிக் கட்டணம் ரூபா 3000 மட்டுமே!
சான்றிதழ், அனுமதி, புத்தகங்கள் இலவசம்
29.03.2019 இற்கு முன் முன்பதிவு செய்தல் அவசியம்.
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்.நகர்.
021 222 4282
077 621 4567

விசேட வகுப்புகள்
வேலைவாய்ப்புக்கள் தொடர்பான பரீட்சைகள் மற்றும் தடைதாண்டல், பதிவியுயர்வு பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு மற்றும் ஏனைய நாள்களில் மாலை நேரங்களில் நடைபெறுகின்றன.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
076 688 3394

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## கல்வித்துறை நியமனங்களில் அதிக கவனம் மிக அவசியம்

ஈழத் தமிழர்களின் - குறிப்பாக வடக்குத் தமிழர்களின் - பெரும் சொத்து கல்வி என்போம்.

ஒரு காலத்தில் இலங்கையில் கொடி கட்டிப் பறந்தது நமது கல்வித்துறை. அனைத்து மாகாணங்களிலும் அது முன்னணியில் திகழ்ந்தது.

யுத்த காலத்தில் கூட - பெரும் போரழிவுகள், பேரழிவுகளுக்கு மத்தியிலும் கூட - அந்த முன்னிலையை நாம் வகித்தோம்.

பல்கலைக்கழக அனுமதியில் வடக்கு மாணவர்கள் உச்ச எண்ணிக்கையில் இடம்பெறுகின்றமையைச் சகிக்க முடியாதால்தான் தென்னிலங்கை அரசு தரப்படுத்தல் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, மாவட்ட ரீதியான எண்ணிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிகளை முன்னெடுத்தது.

கல்வியில் உயர் தரத்திலான பெறுபேறுகளைப் பெற்றும் தரப்படுத்தல் என்ற முறைமை மூலம் வடக்குத் தமிழர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் உயர்கல்விக்குக் கதவடைப்புச் செய்யப்பட்டது. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கிப் போராடி, உரிமையையும், சுதந்திரத்தையும் வலியுறுத்தி நிற்கச் செய்ததில் இந்தத் தரப்படுத்தல் முறைமையும் பிரதான காரணிதான்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. இலங்கையில் தேசிய ரீதியில் கல்வியில் பின்தங்கிய கடைசி இரண்டு மாகாணங்களும் வடக்கும், கிழக்கும்தான்.

இந்த அவல நிலைமை குறித்து யாரும் சிந்திப்பவர்களாக - கவலைப்படுபவர்களாக - தெரியவில்லை.

விஞ்ஞான ரீதியாக - ஆய்வு ரீதியாக - இந்த விடயத்தை ஆராய்ந்து பின்னடைவுகளுக்கான காரணங்களையும், மேம்படுவதற்கான உத்திகளையும் கண்டறியும் பொறுப்பை யாரும் மேற்கொள்பவர்களாகவும் தெரியவில்லை.

கல்வி நிர்வாகிகளிடமும் இதனைக் காணவில்லை. அல்லது அவர்களை வழிப்படுத்தும் அரசியல் தலைவர்களும் அது பற்றிக் கவலைப்படுபவர்களாகத் தெரியவில்லை.

நாட்டின் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் பற்றி நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வப்போது அறிவிக்கின்றார். அவற்றில் ஒன்று முக்கியமானது.

ஆசிரியர் பணியை முன்னெடுப்பதற்கான பயிற்சியை முடிக்காத எவரையும் இனிமேல் ஆசிரியர்களாக உள்ளெடுக்க மாட்டோம் என்று அவர் அமைச்சரவையில் முடிவு எடுத்து அறிவிக்கின்றார்.

ஆனால், நமது வடக்கு அரசியல்வாதிகளோ, யுத்தம் முடிவடைந்து பத்தாண்டுகள் கழித்து விட்ட பின்னரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு - அதுவும் 50 வயது வரை உள்ளவர்களுக்கு - நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து அறிவிப்புக்களை விடுத்து 'வாக்கு வங்கிகளை' உறுதிப்படுத்துவதில் 'சீரியஸாக' இருக்கின்றார்கள்.

யுத்தக் காலத்தில் சீரற்றிருந்த பாடசாலைக் கல்வியை சீரழிய விடாமல் காப்பாற்றிய தொண்டர் ஆசிரியர்களை அங்கீகரிப்பதில் நமக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. ஆனால் அதனை முறையான செயற்றிட்டத்தின் அடிப்டையில் முன்னெடுக்க வேண்டும்.

நிரந்தர நியமனம் பெறுவோர் ஆசிரியர் கற்பித்தலுக்கான வாண்மையைப் பெறச் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் நிரந்தர நியமனம் பெற்ற கையோடாவது ஆசிரியருக்கு உரிய தகுதிகளைக் பெறுவதற்கான பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கவேண்டும்.

நானூறு தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் பெற்றுக் கொடுத்தமையுடன் அந்த நானூறு பேர் மூலம் ஆயிரத்து அறுநூறு வாக்குகளை உறுதிப்படுத்தி விட்டோம் என்று மன மகிழ்வடைவதை விடுத்து -

ஆசிரிய பயிற்சி வாண்மையைப் பெறாத நானூறு பேரை நமது சமூகத்தில் நிரந்தர ஆசிரியர்களாக்கி விட்டோம், அவர்களினால் நமது கல்வித்துறைக்குப் பின்னடைவு ஏற்பட முன்னர், அந்த நானூறு பேரும் ஆசிரியர் கற்பித்தலுக்கான வாண்மையைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக பயிற்சி பெற வைத்து, தரத்தை மேம்படுத்தி உறுதிப்படுத்தவதும் நமது கட்டாயக் கடமை - பொறுப்பு - என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் சிரத்தை எடுத்துக் கவனிக்க வேண்டும்.

கடந்த சில வருடங்களில் நாம் நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுத்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்களில் எத்தனை பேருக்கு அதற்கான வாண்மையை மேம்படுத்தும் பயிற்சிகளை ஒழுங்குபடுத்தியுள்ளோம் என்பதை அரசியல்வாதிகள் கவனிப்பார்களாயின், வாக்கு வங்கிக்காக ஆசிரிய நியமனங்கள் வழங்குவதின் ஆபத்தை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

நமது மக்களுக்கு - குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கு - வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் நமது அரசியல்வாதிகளை குறைகூறுவது நமது இலக்கு அல்ல. அப்படி வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தமது வாக்கு வங்கியை ஸ்திரப்படுத்தும் அரசியல்வாதிகளின் தந்திரோபாயத்தைக் குறை சொல்வதும் நமது எண்ணமல்ல.

ஆனால், கல்வித்துறையில் - குறிப்பாக போதனைத் துறையில் - இத்தகைய நியமனங்கள் மிக அவதானத்துடன் செய்யப்பட வேண்டும். இல்லையேல் கல்வித்துறையே சீரழிந்துவிடும்.

# குப்பைகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி

## அக்கரைப்பற்று மாநகர முதல்வருடன் கொரிய நிறுவனத்தினர் ஆராய்வு



மட்டக்களப்பு, மார்ச் 28

அக்கரைப்பற்று மாநகரில் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்திசெய்யும் திட்டத்தைமுன்னெடுப்பதுதொடர்பாககொரியநாட்டின்முன்னணி பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தூதுக்குழுவினர் அக்கரைப்பற்று மாநகர முதல்வருடன் பேச்சு நடத்தினர்.

அக்கரைப்பற்றுக்கு நேற்று முன் தினம் மாலை வருகை தந்த கொரிய நிறுவனத்தின் அதிகாரிகள் குழு, மாநகர முதல்வர் சக்கி அதாவுல்லாவை சந்தித்து இந்தத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

நல்லாட்சிக்கான புத்தாக்க நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் எம்.ஐ.எம்.வலீத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அக்கரைப் பற்று மாநகரசபையின்ஆணையாளர் உட்படசபையின்உத்தியோகத்தர்கள்சிலரும் பங்கேற்றிருந்தனர்.

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் தினசரி குப்பைகள் சேகரித்து அகற்றப்படுவதாக தெரிவித்த மாநகர முதல்வர் சக்கி அதாவுல்லா, அதற்கான செயற்பாடுகள் மற்றும் செலவீனங்கள் தொடர்பில் மேற்படி நிறுவனத்தின் தூதுக்குழுவினருக்கு விவரித்துக் கூறினார்.

இப்பகுதியில் சனநெரிசல் இட நெருக்கடி காரணமாக தமது மாநகர சபை எல்லைக்குள் குப்பை கொட்டுவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லாதிருப்பதாகச் சுட்டிக்காட்டிய முதல்வர், இதனால் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் பணம் செலுத்தியே குப்பைகளைக் கொட்டி வருவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான காரணங்களினால் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தை முன்னெடுப்பதில் தமது மாநகர சபை எதிர்கொள்கின்றசவாலைவெற்றிகொள்வதற்கு வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் இதன்போது முதல்வர் வலியுறுத்தினார்.


அக்கரைப்பற்று மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் பொருட்டு இப்பகுதியில் அன்றாடம் சேர்கின்ற குப்பைகளைக் கொண்டு மின்சார உற்பத்தியை மேற்கொள்வதற்கான திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கு தமது நிறுவனம் தயாராக இருக்கிறது என்று தெரிவித்த தூதுக்குழுவினர், இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு 20 ஏக்கர் நிலம் ஒன்று ஒதுக்கித்தரப்பட வேண்டும்எனகேட்டுக்கொண்டனர்.

கல்முனையில் நிலப் பற்றாக் குறை காணப்படுவதனால் இந்த திட்டத்துக்காக பெருமளவு நிலப் பரப்பை பெற்றுக்கொள்வதென் பது பெரும் சவாலான விடயம் என்று சுட்டிக்காட்டிய முதல்வர் சக்கி அதாவுல்லா, இதற்கு மாற்றுவழிகள் குறித்து பரிசீலிக்க முன்வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான சாத்தியமான பொறிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு இணக்கம் தெரிவித்த கொரிய நிறுவனக் குழுவினர், தமது உத்தேச மின்சார உற்பத்தித்திட்டம் தொடர்பிலான நகல் வரைவை முதல்வரிடம் கையளித்தனர். (ஐ)

# ஐ.நா. தீர்மானத்தை எதிர்ப்பதாக பகிரங்கமாக அறிவிக்கமுடியுமா?

## அரசுக்குக் கூட்டமைப்பு சவால்



கொழும்பு, மார்ச் 28

ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றாவிடின், அது குறித்து நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்க முடியுமா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சவால் விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம்வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில்,உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தொடர்பான ஜெனீவா தீர்மானம் குறித்து, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுவருகின்றனர். கலப்பு நீதிமன்ற விசாரணை பொறிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு அந்தத்தீர்மானத்தை அமுல்படுத்த முடியாது என ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுவதை விடுத்து, இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்க முடியுமா?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த போன்று பகிரங்கமாக உங்களால் கூற முடியுமா? அவர் ஒரு விடயத்தைச் செய்ய முடியும் என்றால் முடியும் என்றும், முடியாது என்றால் முடியாது என்றும் பகிரங்கமாகக் கூறக்கூடிய ஒருவர்.

எனவே முடிந்தால் அவர் போன்று கலப்பு நீதிமன்ற விசாரணை பொறிமுறையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நாடாளுமன்றத்திற்கு வந்து கூறுங்கள் - என்றார். (ஐ)

# வில்பத்து அறிக்கையின் பிரதி சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 28

வில்பத்து காடழிப்பு விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதிஆணைக் குழுவினது அறிக்கையின் பிரதியொன்று நேற்று நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது, பிரதிச் சபாநாயகர் இது குறித்து அறிவித்தார்.

வில்பத்துதேசியபூங்காவை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராயவே, ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


**நாளை**

29.03.2019
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: பூராடம் பி.ப. 04.05 வரை.
திதி : நவமி பி.இ. 04.11 வரை.
இராகுகாலம் : 10.43 - 12.13
சுப நேரம் : 06.13 - 07.43

# குடு ரொனின் மனைவி கைது

கொழும்பு, மார்ச் 28
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள போதைப் பொருள் வர்த்தகர் குடு ரொனின் மனைவியும், மற்றுமொருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குடுரொனின்மனைவியான அருணி பபா, தெல் சூடி என்போரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

# மின் தடை



யாழ்ப்பாணம் மார்ச் 28
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5.30 மணி வரை–
**மன்னரர் பிரதேசத்தில்** புதுக்காமம், எழுத்தூரிலிருந்து தலைமன்னரர் வரை, Timex ஆடைத்தொழிற்சாலை, Youth Crop பயிற்சி நிலையம், Palmyrah house, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, சுவல்மென் ஐஸ்தொழிற்சாலை, தலைமன்னரர் கடற்படை முகாம், தலைமன்னர Palmyra house, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)




# எந்தப்பாதையை தெரிந்துள்ளோம்

சில ஆண்டுகளுக்கு முன், தை மாத இரண்டாம் வாரத்தில் ஒரு சிறிய ஒன்றுகூடல். அதில் ஓர் இந்து நண்பர் கருத்துப் பகிர்ந்தார். தைப் பிறப்பன்று காலை தான் சாமி கும்பிடும் போது இன்று எமது கிறிஸ்தவ சகோதரங்கள் நல்ல தீர்மானங்களை எடுத்து, ஏதோவழத்தில் தம் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள். இன்றைய அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நானும் ஏன் முன்னேற முடியாது? என்று சிந்தித்து தனது தொடர் சிகரெட் புகைத்தலை விட்டுவிட முடிவெடுத்ததார் எனவும், அன்றிலிருந்து ஒரு சிகரெட்டுமே புகைக்கவில்லைஎன்றும் மகிழ்ச்சியுடனும் ஒரு வெற்றிக்களிப்பிலும் கூறினார். அத்துடன் அந்தப்பழக்கத்தை முற்றிலும் அவர் கைவிட்டுவிட்டார்.
கிறிஸ்தவர்களுக்கும் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த அழைக்கும், வழங்கப்படும் ஓர் அரிய, புனிதகாலமே இத் தவக்காலம். இயேசு மலைப்பொழிவில் காட்டிய அந்த ஒடுக்கமான, அதேநேரம் வாழ்வுக்குரிய பாதையை இன்று உலகம் பெரும்பாலும் கைவிட்டு, அழிவுக்குரிய, அகன்ற, இலேசான, கவர்ச்சியான, சுவையான பாதையை தெரிந்தெடுத்து, கடவுளே இல்லையென்றவாறு ஓடுகின்றது.
"எந்தப்பாதையை நான் தெரிந்தெடுத்துள்ளேன்?' என என்னையே நான் எனது உள்ளரங்கில் நேர்மையாகவும், அமைதியாகவும் சோதித்து, எனது வாழ்வுத்திசையை மாற்றி அமைக்கத் தரப்பட்டுள்ள இந்த நாள்களை உரியமுறையில் பாவிப்போம். எமதுதவறுகளை நியாயப்படுத்துவதை நிறுத்தி, நன்மையானது எதுவும் தனிய எம்மால் செய்யமுடியாது என்பதை உணர்ந்தவர்களாக, நேர்மையாகவும் தாழ்ச்சியுடனும் ஆண்டவனிடம் எம்மை சமர்ப்பித்து அவரின் வழிகாட்டலுக்கு எம்மை விட்டுக்கொடுப்போமாக. சிறிது காலத்தில் பெருவெற்றியையும் வளர்ச்சியையும் உணர்வோம்.

**அ.சந்தியாப்பிள்ளை**
**மாதகல்**

# இராணுவத்துக்கு எதிரான விசாரணைக்கு தயாரில்லை

## சரத் அமுனுகம திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 28
போர்க்குற்றம் என்ற சொற்பதத்தை ஏற்று படையினருக்கு எதிராக விசாரணை நடத்துவதற்கு இலங்கை ஒருபோதும் தயாரில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.
வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்–
ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்த இலங்கைத் தூதுக்குழுவுக்கு தலைமை வகித்த வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன சிறப்பாகச் செயற்பட்டார். வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் அதை மறந்து 'நாடு' குறித்து சிந்தித்தே ஜெனீவாவில் குரல் எழுப்பினோம்.
அதேபோல், இம்முறை மாற்று பொறிமுறையொன்றைக் கையாள்வதற்கு ஆலோசனை வழங்கியிருந்த ஜனாதிபதிக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
சர்வதேச நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை அவசியம் என வலியுறுத்தப்பட்டிருந்தாலும் அதை நாம் ஏற்கவில்லை. தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான காலவரையறையையும் ஏற்கவில்லை.
இலங்கை அரசமைப்பின்பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கமுடியாது. எனவே, எங்கு என்ன தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில் தீர்மானங்களை எடுக்க முடியாது.
இலங்கைத் தொடர்பான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய சில நாடுகள், புலம்பெயர் அமைப்புகளின் தாளத்துக்கேற்ப செயற்பட்டன. கனடா சார்பில் புலம்பெயர் தமிழர் ஒருவரே மாநாட்டில் பங்கேற்றிருந்தார்.
அதேபோல் ஐ.நா. மனித உரிமையாளர் ஆணையாளராக நவநீதம் பிள்ளை செயற்பட்ட காலத்திலேயே இலங்கைக்கு எதிராக கண்மூடித்தனமாகதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன. அவர் ஓய்வுபெற்றாலும், அவர் காலத்தில் செயற்பட்ட அதிகாரிகள் இன்னும் இருக்கின்றனர். எனவே, இது குறித்தும் சிந்திக்கவேண்டும்.
'போர்க்குற்ற' விசாரணை என்ற கோட்பாட்டை நாம் ஏற்கவில்லை. மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால் உள்நாட்டு நீதி பொறிமுறையின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ஐ)

# ஜெனீவா வாக்குறுதியைக் காப்பாற்ற உள்ளகப் பொறிமுறை அமையுங்கள்!

## அரசிடம் கோருகின்றார் மஹிந்த சமரசிங்க



கொழும்பு, மார்ச் 28
ஜெனீவாவில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தேசிய பொறிமுறை ஒன்றை அமைக்க வேண்டும் என்று எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.
வரவு –செலவுத்திட்டத்தின் குழுநிலைவிவாதத்தில்நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர்–
'2001ஆம்ஆண்டுபிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமை காரணமாக இலங்கையை எந்த சந்தர்ப்பத்திலும் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாது. அந்தக் கௌரவம் பிரதமரையே சாரும். அதேவேளை, ஜெனீவாவில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தேசிய பொறிமுறை ஒன்றை அமைக்கவேண்டும் – என்றார். (ஐ)

# வடக்கு மாகாண ஆளுநர் நேற்று கிளிநொச்சியில் மக்கள் சந்திப்பு



கிளிநொச்சி, மார்ச் 28
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் பொது மக்கள் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.
மாவட்டங்கள் தோறும் பொது மக்கள் சந்திப்பு நிகழ்வை நடத்தி வரும் வடக்கு மாகாண ஆளுநர் நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் பொது மக்கள் சந்திப்பை மேற்கொண்டார்.
இதன் போது பல பொது மக்கள் கலந்துகொண்டு தங்களின் பிரச்சினைகளை ஆளுநரின் கவனத்திற்குகொண்டுசென்றனர். இதில் அதிகளவான காணிப் பிணக்குகள் காணப்பட்டன. அதிலும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிப்பிணக்கள் அதிகம் காணப்பட்டன.
இதன் போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி, சுகாதாரம், விவசாயம், மகளீர் விவகாரம், உள்ளூராட்சி, அமைச்சின் செயலாளர்கள் வடக்கு மாகாண காணிஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட அகாரிகளும் கலந்தகொண்டனர். (ஐ)

# கலப்பு விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை!

## திலக் மாரப்பன அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 28
போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கலப்பு விசாரணைப் பொறிமுறையை உருவாக்கவோ, வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கவோ, இலங்க அரசுக்குச் சட்ட ஏற்பாடுகள் அனுமதிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில், ஜெனீவா தீர்மானம் குறித்து விளக்கமளித்து உரையாற்றிய அவர் –
வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறையை அமைப்பதாக இலங்கை வாக்குறுதி கொடுக்கவில்லை.
சாதாரணமாக வெளிநாட்டில் கல்வி கற்ற மருத்துவர் ஒருவர் கூட இங்கு வந்து பணியாற்ற முடியாது. தேர்வு எழுதி தகுதி பெறவேண்டும். அது வெளிநாட்டு நீதிபதிகளுக்கும் கூடப் பொருத்தமானது.
வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கும் சட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லை. அதற்கு பொதுவாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரத்தையும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற வேண்டும்.
விமானிகளுக்கான அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிராதவர்களை விமானம் ஓட்ட அனுமதிக்கும் வகை யில் விமானக் கட்டளைச் சட்டத்தைத் திருத்த முடியாது.
அதுபோலவே, வெளிநாட்டு நீதிபதிகளை பற்றி பேசும் போதும், அவர்களின் தகுதிகள் எமக்குத் தெரியாது – என்றார். (ஐ)

# வெடித்துச் சிதறியது பட்டாசுக் களஞ்சியம் மன்னார்குடியில் 5 பேர் உடல் சிதறிப் பலி!




பட்டாசுக் களஞ்சியம்வெடித்து சிதறியதில் இடிந்து விழுந்த கட்டடம்

மன்னார்குடி,மார்ச்28

தமிழ்நாடு மன்னார்குடியில் நாட்டுவெடி தயாரிப்பு நிறுவன பட்டாசுக்களஞ்சியத்தில்நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உடல் சிதறி பலியாகினர்.

திருவாரூர்மாவட்டம்மன்னார் குடியில் உள்ள மன்னை நகர் பாமினி ஆற்றங்கரையோரம் சிங்காரம் என்பவருக்குச் சொந் தமான பட்டாசுக் களஞ்சியம் உள்ளது.கடந்த25ஆண்டுகளாக அவர் பட்டாசுகளைத் தயாரித்து வருகிறார். இங்கு திருவிழாவிற்கு தேவையான பட்டாசுகள் தயாரிக் கும் பணி நாள்தோறும் நடந்து வருகிறது. இதில் அப்பகுதிகளை சேர்ந்த ஏராளமான ஆண், பெண் தொழிலாளர்கள் ஈடுபட் டுள்ளனர்.

பங்குனிதிருவிழா, தேர்தலை யொட்டிதற்போதுநாட்டுவெடிகள், பட்டாசுகள் தயாரிக்கும் பணி மும்முரமாக நடந்து வந்தது.

நேற்றுக் காலை 9 மணியள வில் வழக்கம் போல் பட்டாசு தயாரிக்கும் கிடங்கிற்கு வேலைக் காக தொழிலாளர்கள் வந்து பட்டாசுகளைத் தயார் செய்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென எதிர்பாராத விதமாக அங்கிருந்த பட்டாசுகளில் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதைக் கண்ட பட்டாசு தயாரித்து கொண்டிருந்த தொழிலாளர்கள் கிடங்கை விட்டு வெளியே ஓடிவர முயன்றனர்.இந்த வெடிச்சத்தம் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு அந்த பகுதியில் உள்ள குடியி ருப்பு பகுதிகளில் கூட அதிர்வை ஏற்படுத்தியது.

ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் அனைத்து பட்டாசு களும் வெடித்து நாலாபுறமும் சிதறின. இதில் சம்பவ இடத்தி லேயே 5 பேர் உடல் சிதறி பலி யாகினர். இந்த வெடி விபத்தில் பட்டாசு கிடங்கு முற்றிலும் இடிந்து தரைமட்டமானது. பயங்கர வெடி சத்தம் கேட்டு அப்பகுதி மக்கள் பட்டாசு கிடங்கை நோக்கி வேக மாக ஓடிவந்தனர்.


அப்போது 3 பேர் உடல் சிதறி உருக்குலைந்த நிலையில் இறந்து கிடந்தமையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மேலும் 2 பேர் கை, கால்கள் சிதைந்து உயிருக்கு போராடி கொண்டிருந் தனர். அவர்களை மீட்டு திரு வாரூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் அங்கு அவர்கள் சிகிச்சை பல னின்றி இறந்தனர்.

தகவல் அறிந்து உடனடியாக மன்னார்குடி, திருவாரூர், நீடா மங்கலம் தீயணைப்புத்துறை யினர்சம்பவஇடத்துக்குவிரைந்து வந்தனர். இதையடுத்து தீய ணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்ததீவிபத்தில் 2 பேர்காயம் அடைந்ததனர் என கூறப்படுகி றது. மேலும் கட்டட இடிபாடுகளில் வேறுதொழிலாளர்கள் சிக்கி உள் ளார்களா என்று தீயணைப்பு படையினர் தேடி வருகின்றனர்.

இந்த பட்டாசு தீவிபத்தில் இறந்த 5 பேரும் அப்பகுதியை சேர்ந்தவர்கள்தான் எனக் கூறப் படுகிறது. அவர்கள் சேட்டு, பாபு, சிங்காரவேலு, மோகன், அறிவு என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

## கோவாவில் கூட்டணிக் கட்சியைப் பிளந்து தன்னோடு சேர்த்தது ஆளும் பாரதீய ஜனதா!

பனாஜி,மார்ச்28

கோவா மாநிலத்தில் பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு அளித்து வந்த மகாராஷ்டிர கோமந்தக்கட்சி இரண்டாக உடைந்துள்ள நிலையில், அதில் 2 எம்.எல்.ஏக்களைக் கொண்ட ஓர் அணி பா.ஜ.கவில் இணைந் தது.

கோவா மாநிலத்தில் முதல்வர் மனோ கர் பாரிக்கர் காலமானதையடுத்து, சட்ட சபையில் ஆளும் பா.ஜ.க. கூட்டணியின் பலம் குறைந்தது. எனவே, தனிப்பெரும் கட்சியாக உள்ள காங்கிரஸ் ஆட்சியமைக் கும் முயற்சியில் இறங்கியது. ஆனால் பா.ஜ.க. கூட்டணிக்கு சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருந்த நிலையில், பா.ஜ.கவின் முதல்வர் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்ட பிரமோத் சாவந்துக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் முதல்வர் பிரமோத் சாவந்த் வெற்றி பெற்றார்.

இந்நிலையில் பாஜக கூட்டணியில் இடம்பெற்றிருந்த மகாராஷ்டிரவாடி கோமந்தக் கட்சி (எம்.ஜி.பி.) இரண்டாக உடைந்தது. அந்த கட்சியைச் சேர்ந்த 3 எம்.எல்.ஏக்களில் மனோகர் அஜாங்கர், தீபக் பவாஸ்கர் ஆகியோர் கட்சியில் இருந்து பிரிந்து புதிய அணியை உரு வாக்கினர். பின்னர் அவர்கள் பா.ஜ.கவில் இணைந்தனர்.

இந்த இணைப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் நள்ளிரவில் இருவரும் சபாநாயகர் மைக்கேல் லோபோவிடம் கடிதம் கொடுத்தனர். அந்த கடிதத்தில் மகாராஷ்டிரவாடி கோமந்தக் கட்சியின் மற்றொரு எம்.எல்.ஏவும் துணை முதல் வருமான சுதின் தவாலிகர் கையெழுத்தி டவில்லை.

கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப் பினர்கள் தனி அணியாகப் பிரிந்து, மற்றொரு கட்சியில் இணைந்தால் கட் சித் தாவல் தடை சட்டத்தின்கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது.

தற்போது 2 எம்.எல்.ஏக்கள் வருகை யால் கோவா சட்டசபையில் பாஜக உறுப் பினர்களின் பலம் 14 ஆக உயர்ந்துள் ளது. காங்கிரசுக்கும் 14 எம்.எல்.ஏக்கள் உள்ளனர்.

கட்சியில் பிளவு ஏற்படுத்த சதி நடப் பதாகவும், அதனால் சாவந்த் தலைமை யிலான அரசுக்கு அளித்து வந்த ஆத ரவை திரும்ப பெறுவதாகவும் எம்.ஜி.பி. கட்சியின் தலைவர் தீபக் தவாலிகர் நேற்று முன்தினம் மிரட்டல் விடுத்தி ருந்தார். நேற்று (புதன்கிழமை) நடக்கும் மத்திய குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியிருந்த நிலையில், 2 எம்.எல்.ஏக்கள் தனி அணியாக பிரிந்து பா.ஜ.கவில் இணைந் தது குறிப்பிடத்தக்கது.

2012 இல் இருந்து பா.ஜ.கவுடன் மகாராஷ்டிரவாடி கோமந்தக் கட்சி கூட்டணிவைத்துள்ளது. இன்று நடக்கும் கூட்டத்தில் பா.ஜ.க. அரசுக்கு வழங்கிய ஆதரவை திரும்ப பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது. துணை முதல்வர் சுதின் தவாலிகர், அமைச்சரவையில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.

கூட்டணிக் கட்சிகளை பா.ஜ.க. மிரட்டுவது இதன்மூலம் நிரூபணமாகி யிருப்பதாக காங்கிரஸ் கட்சியின் செய் தித் தொடர்பாளர் சுனில் காவ்தாங்கர் விமர்சித்துள்ளார்.

## பாலர் வயதில் போதித்த ஆசிரியைக்கு கௌரவம்




டில்லியை சேர்ந்த 33 வயதான ரோகன் பாசின என்ற விமானி 3 வயதில் தனக்கு கற்பித்த ஆசிரியையை வித்தி யாசமான முறையில் கௌரவித்துள்ளார்.

கப்டன் ரோகன் பாசின தனக்கு கல்வி அறிவு அளித்து உயர்ந்த நிலைக்கு வர அடித்தளமிட்ட சுதா சத்யன் என்ற ஆசி ரியை கௌரவப்படுத்த விரும்பினார். எனவே, அவரை டில்லியில் இருந்து அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ நகருக்கு விமானத்தில் அழைத்துச் சென்றார். தனது நன்றியை விமானத்தில் இருந்த அனைவருக்கும் முன்னால் ஆசிரியையை கௌரவித்து வெளிப்ப டுத்தினார்

## செயற்கைக்கோளை சுட்டு வீழ்த்தும் ஏவுகணைச் சோதனை பெருவெற்றி!

### நரேந்திர மோடி நேற்று அறிவிப்பு



புதுடில்லி, மார்ச் 28

விண்வெளியில்இருக்கும்செயற்கைக்கோள் ஒன்றைச் சுட்டு வீழ்த்தும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தத்தொழில்நுட்பத்தைக்கொண்டுள்ள உலகின் நான்காவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்த ஏவுகணை செயற்கைக்கோளை மூன்று நிமிடங்களில் துல்லியமாக சுட்டு வீழ்த்தியதாக அவர் தெரிவித்தார்.

மிசன் சக்தி என்று பெயரிடப்பட்ட இந்த விண்வெளித் திட்டம் முழுவதும் இந்தியத் தொழில்நுட்பங்களைக் கொண்டே செயல் படுத்தப்பட்டது என்றார் மோடி.

இந்தியா 'லோ எர்த் ஆர்பிட் சேட்டிலைட்' எனப்படும் தாழ்வான உயரத்தில் பறக்கும் செயற்கைக்கோள் ஒன்றை சுட்டு வீழ்த்தியுள் ளதாகவும், இந்தியா ஒரு விண்வெளி வல் லரசாக ஏற்கனவே உருவெடுத்துள்ளது என்றும் நேற்று நாட்டு மக்களுக்கு தாம் ஆற்றிய உரையில் மோடி குறிப்பிட்டார்.

இந்திய விஞ்ஞானிகளால் நமக்குப் பெருமை என்றும் பூமியை நேரலையாக கண்காணிக்கும் தொழில்நுட்பம் இந்தியா விடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்துக்கு பிறகு ஆற்றிய உரையில் அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

பூமியின் மேல் பரப்புக்கு மேல் 400 முதல் 1000 மைல் தொலைவில் வட்டமிடும் செயற்கைக்கோள்கள் 'லோ எர்த் ஆர்பிட்ஸ்' எனப்படும்.

நேற்று முற்பகல் 11.45 மணி முதல் 12.00 மணி வரை நாட்டு மக்களுக்கு உரையாற்றப்போவதாக அவர் முன்னதாக ட்விட்டரில் பதிவிட்டிருந்தார். தொலைக்காட்சி, வானொலி அல்லது சமூக ஊடகங்கள் மூலம் தனது உரையை கேட்குமாறு அவர் கோரிக்கை விடுத்து இருந்தார்.

12.15 மணிக்கு மேல் உரையை தொடங்கிய அவர், இந்திய விண்வெளி துறையின் சாதனைகள் குறித்து பேசினார்.(ஐ)

# தாய்லாந்தில் குழப்பம் தேர்தல் முடிவு தாமதம்

பாங்கொக்,மார்ச்28

தாய்லாந்தில் குழப்பம் நிலவி வருவதால், தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தாய்லாந்தில் 2014 ஆம் ஆண்டு நடந்த ஆட்சி கவிழ்ப்புக்குப் பிறகு முதல் முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு பொதுத்தேர்தல் நடந்தது. 5 கோடிக்கும் அதிகமானோர் வாக்களிக்க தகுதியானவர்களாக இருந்த நிலையில், இந்த தேர்தலில் 64 சதவீத வாக்குகள்தான் பதிவாகின.

ஞாயிற்றுக்கிழமை மாலை வாக்குப் பதிவு முடிந்தபிறகு 90 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் எண்ணிக்கை முடிந்துவிட்ட நிலையில், யாரும் எதிர்பாராத வகையில் இராணுவ ஆதரவு பெற்ற கட்சியான பாலங் பிரசாரத் கட்சி முன்னணியில் இருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியது.

அதன்படி தற்போதைய பிரதமர் பிரயாட் சான்ஓசா தலைமையில் அரசு அமைக்கப்பட வேண்டிய சூழல் உருவானது. ஆனால் தொடர்ச்சியான முறைப்பாடுகள் மற்றும் முறையற்ற தகவல்கள் காரணமாகத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் குழப்பம் ஏற்பட்டது.

இதையடுத்து தேர்தல் முடிவுகள் ஓரிரு நாள்களில் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆனால் அதிகாரப்பூர்வமான முழுமையான முடிவுகள் மே மாதம் வரை வெளியிடப்படா எனத் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஞாயிற்றுக்கிழமை நடந்த பொதுத்தேர்தலில் மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடந்தன எனக் குற்றம்சாட்டி உள்ள முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினவத்ரா, முறைகேடு நடந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.



# தேர்தலுக்கு முன் இந்தியா திரும்பவும் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தும்?

## முன்னெச்சரிக்கை விடுக்கின்றார் பிரதமர் இம்ரான்கான்

இஸ்லாமாபாத்,மார்ச்28

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு இந்தியா இன்னொரு தாக்குதலை நடத்தலாம் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கூறியுள்ளார்.

புல்வாமா தாக்குதலுக்கு பிறகு இந்தியா – பாகிஸ்தான் இடையேயான உறவில் பதற்றம் அதிகரித்தது. புல்வாமாவில் கடந்த மாதம் 14 ஆம் தேதி ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தி இந்தியாவின் 40 துணை இராணுவத்தினரை கொன்றது.

இந்த அமைப்பு பாகிஸ்தானை மையமாக கொண்டு செயல்படுகிறது என்பதால் அதன் தலைவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பெப்ரவரி 26 ஆம் திகதி இந்திய விமானப்படை பாகிஸ்தானுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தி ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் முகாம்களைச் சிதைத்தது. இந்த விவகாரத்தால், இந்தியா – பாகிஸ்தான் இடையேயான உறவில் பதற்றம் அதிகரித்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இவ்விடயத்தை ஒட்டி வெளியிட்ட கருத்து எனக் குறிப்பிட்டு அந்நாட்டின் பிரபல நாளிதழான டானில் கூறப்பட்டுள்ளவை வருமாறு: –

நம்மைச் சூழ்ந்திருக்கும் ஆபத்து இன்னும் நீங்கவில்லை.

இந்தியாவில் தேர்தலை முடியும் வரை நம்மை சூழ்ந்துள்ள நெருக்கடி அப்படியேதான் இருக்கும். தேர்தலுக்கு முன்பாக நரேந்திர மோடி நிர்வாகம் (இந்திய மத்திய அரசு) நம் மீது தாக்குதல் நடத்தலாம். இதனை எதிர்கொள்வதற்கு அனைத்து விதங்களிலும் நாம் தயாராக இருக்கிறோம்.

– இவ்வாறு இம்ரான் கான் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானில் பெருவெள்ளம் 18 பேர் உயிரிழந்தனர்!

## நூறுக்கும் அதிகமானோர் காயம்

ஈரானில் ஏற்பட்ட வெள்ளத்துக்கு இதுவரை 18 பேர் பலியாகி உள்ளனர். 100க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இது குறித்து ஊடகங்கள் வெளியிட்ட தகவல்கள் வறுமாறு : –

"ஈரானின் 31 மாகாணங்களில் 26 மாகாணங்களுக்கு வெள்ள எச்சரிகை விடுக்கப்பட்டுள்ளது. ஈரானின் ஃபார்ஸ் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டதில் 18 பேர் பலியாகினர். 100க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வரும் நால்களில் பலத்த மழை பெய்ய உள்ளதால் ஈரானின் வடக்குப் பகுதியும் பாதிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடிநிவாரண உதவிகளைச் செய்யத் தவறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

பருவநிலை மாற்றத்தின் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் ஏற்பட்ட பருவநிலை மாற்றத்தின் விளைவே ஈரானில் எற்பட்ட வெள்ளம் என்று ஈரான் அமைச்சகம் சார்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிகிச்சை பெற 6 வார பிணையில் வெளியே வந்தார் நவாஸ் ஷெரீப்!



லாகூர்,மார்ச்28

ஊழல்வழக்கில் சிறைதண்டனை பெற்றுள்ள முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் 3 மாதங்களுக்குப் பிறகு சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்தார்.

அல் – அஜீஸியா இரும்பாலை ஊழல் வழக்கில் 7 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள நவாஸ் ஷெரீப், லாகூரின் கோட் லக்பத் சிறையில் கடந்த டிசம்பர் மாதம் முதல் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு இருதய நோய் பாதிப்பு உள்ளிட்டவை அதிகமானதால், சிறை வளாகத்திலேயே மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், பாகிஸ்தான் உள்துறை அமைச்சகத்தின் அனுமதி பெற்று, நவாஸ் ஷெரீபின் மகள் மரியம் நவாஸ், அவரது தனிப்பட்ட மருத்துவர் உள்ளிட்டோர், கடந்த 22 ஆம் தேதி ஷெரீபைச் சிறையில் சந்தித்து நலம் விசாரித்தனர். அப்போது, அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாக மரியம் நவாஸ் வருத்தம் தெரிவித்தார்.

இந்நிலையில், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக பிணை அளிக்கப்பட வேண்டும் என்று கோரி, நவாஸ் சார்பில் அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த உச்சநீதிமன்றம், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக நவாஸுக்கு 6 வாரங்கள் பிணை வழங்குவதாக அறிவித்தது.

இதையடுத்து, ஏறத்தாழ 3 மாதங்களுக்கு பிறகு பிணையில் நவாஸ் ஷெரீப் வெளியே வந்தார். நவாஸ் ஷெரீப்பை வரவேற்க அவரது கட்சியினர் சிறைவாசலில் பெருமளவில் திரண்டனர். அவர் சென்ற கார் மீது பூக்களை வீசி உற்சாக வரவேற்பை ஆதரவாளர்கள் அளித்தனர். சிறையில் இருந்து நவாஸ் ஷெரீப் இல்லம் வரை, காரின் பின்னால் அணிவகுத்தபடி ஏராளமான ஆதரவாளர்கள் பின் தொடர்ந்து சென்றனர்.

# பிரான்ஸில் 250 கோடி தங்கப் புதையல்!



பாரீஸ்,மார்ச்28

பிரான்ஸில் தோண்டத் தோண்ட சுமார் 250 கோடி ரூபா பெறுமதி அளவில் தங் கப்புதையல் கிடைத்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் வடமேற்கு பகுதி பிராந்தியங்களான பிரிட்டானி மற்றும் நோர்மண்டியில், கைவிடப்பட்ட நிலப்பகுதியில் தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுமேற்கொண்டனர். அப்போது அங்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் பள்ளம் தோண்டியபோது ஏராளமான தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் கிடைத்தன. அதனை தொடர்ந்து, கூடுதல் ஆராய்ச்சியாளர்கள் வரவழைக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

தோண்ட தோண்டப் புதையல் கிடைத்துக்கொண்டே இருந்தது. இதில் ஒட்டு மொத்தமாக, ரோமானியப் பேரரசு காலத்தைச் சேர்ந்த 70 ஆயிரம் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களும், பல தங்க நகைகளும் கண்டெடுக்கப்பட்டன. இந்தப் புதையலின் மதிப்பு சுமார் ரூ.250 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# பெண் பயணி போதையில் தகராறு இடையில் இறக்கப்பட்ட விமானம்

மாட்ரிட், மார்ச்28

விமானம் நடுவானில் பறந்த போது மதுபோதையில் இருந்த இளம்பெண் தகராறு செய்தமையால், விமானம் இடைவழியில் விமான நிலையம் ஒன்றில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இங்கிலாந்தின் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் இருந்து ஸ்பெயின் நாட்டின் பூயர்டென்தூரா நகரத்துக்கு பயணிகள் விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது, இளம்பெண் ஒருவர் அளவிற்கு அதிகமாக குடித்து விட்டு மதுபோதையில் சக பயணிகளுடன் தகராறில் ஈடுபட்டார்.

அந்த இளம்பெண்ணுடன் வந்திருந்த நண்பரும், விமான ஊழியர்களும் அவரைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயற்சித்தனர். ஆனால் இளம்பெண் தொடர்ந்து ரகளை செய்தார்.

இதையடுத்து விமானம் ஸ்பெயினில் உள்ள கேனரி தீவுகளில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. அங்கு தயார் நிலையில் இருந்த கேனரி தீவு பொலிஸார் விமானத்தில் ஏறி, மது போதையில் தகராறில் ஈடுபட்ட இளம்பெண்ணை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றனர். அப்போது பயணிகள் அனைவரும், கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். இளம்பெண் இறக்கிவிடப்பட்ட பின்னர், விமானம் பூயர்டென்தூரா நகரத்துக்கு புறப்பட்டு சென்றது.

காலைக்கதிர் Kalaikathir



# ஊடகத்தின் பெயரால் மோசடிகள் மறைப்பு!

## நாடாளுமன்றில் டக்ளஸ் காட்டம்!

எமது மக்களிடம் ஒரு கதை உள்ளது. ஏமாற்றுக்காரர்களை சப்ராக் காரன் என்பார்கள். வடக்கில் முன்னர் நிதிக் கம்பனியொன்று ஆரம்பித்து, பணத்தைக் கொள்ளையடித்துவிட்டு தப்பியோடிய அந்த நபர், பிறகு அந்தக் கொள்ளையடித்த பணத்தை வைத்து ஒரு பத்திரிகையையும், வேறு சில தொழில் முயற்சிகளையும் சென்னையிலும், கொழும்பிலுமாக ஆரம்பித்தார். ஊடகப் பேராளி என தனக்குத்தானே மகுடமும் சூட்டிக் கொண்டுள்ளார். தென்பகுதியின் ஆட்சியினருடனும், வடக்கிலிருந்த அதிகாரத் தரப்பாருடனும் கூடிக் குலாவி, இந்த மோசடிக் காரர் தன்னைத்தற்காத்துக்கொண்டார். இந்தவகையில் எமது மக்களின் வாழ்நாள் சேமிப்பை சப்பித் தின்ற அந்த நிறுவனக்காரர் இன்று இந்தச் சபையையும் பிரதிநிதித்துவம் செய்கிறார்

– இவ்வாறு நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா.

2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு ஆகிய அமைச்சுகள் தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு, உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்கள் பகுதி மக்களிடையே ஒரு கதை கூறப்படுவதுண்டு. உண்மைக் கதை. எமது மண்ணிலே பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அதிலும் இதுவும் ஒன்று. எமது மக்கள் தங்களது பணத்தை நம்பிக் கொடுத்து, ஏமாந்து, தாங்களாகவே தற்கொலை செய்து கொண்ட போராட்டம். ஒருவர் ஒரு நிதிக் கம்பனியை ஆரம்பித்தார் சப்ரா என அதற்குப் பெயர் வைத்தார் என்பதால் இந்தக் கதை 'சப்ராக்காரன் கதை' என எமது பகுதியில் கூறப்படுவதுண்டு.

அந்த நிதிக் கம்பனி மூலமாக பல கவர்ச்சிகரமான விளம்பரங்களைப் பிரசுரித்து, எமது மக்களிடமிருந்து பெரும்பாலான நிதியைத் திரட்டிக் கொண்டு அவர் மாயமாக மறைந்துவிட்டார். இவரைத் தேடியும், தமது பறிபோன பணத்திற்காகவும் போராடிய எமது மக்கள் இறுதியில் எவ்விதமான தீர்வுகளும் எட்டப்படாமல் தற்கொலையும் செய்து கொண்டனர்.

அன்று தென்பகுதியின் ஆட்சியினருடனும், வடக்கிலிருந்த அதிகாரத் தரப்பாருடனும் கூடிக் குலாவி, இந்த மோசடிக் காரர் தன்னைத் தற்காத்துக் கொண்டார்.

> **எமது மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து, அதை வைத்து தென்பகுதி அரசுகளுடன் தங்களுக்கான சலுகைகளை, வரப் பிரசாதங்களை பெற்று, இறுதியில் அதே தமிழ் மக்களை விற்றுத் தின்கின்ற அளவுக்கு வந்தும், தமிழ் மக்களுக்கு வழி காட்டுகின்றோம் எனக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.**

இந்தவகையில் எமது மக்களின் வாழ்நாள் சேமிப்பினை சப்பித் தின்ற அந்த நிறுவனக்காரர் இன்று இந்த சபையையும் பிரதிநிதித்துவம் செய்கிறார் என்பது வேறு கதை.

எமதுமக்களது பணத்தைக்கொள்ளையடித்துவிட்டு, தப்பியோடிய அந்த நபர் பிறகு அந்தக்கொள்ளையடித்த பணத்தை வைத்து ஒரு பத்திரிகையையும், வேறு சில தொழில் முயற்சிகளையும் சென்னையிலும், கொழும்பிலுமாக ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகையில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களின் ஊதியங்களிலிருந்தும் ஊழியர் சேமலாப நிதி என அறவிட்டு அவற்றை ஏமாற்றியும், ஊடகவியலாளர்களை அடிமைப்படுத்தியும் வந்த இவர், இன்று முகமூடி அணிந்துகொண்டு, ஊடகப் பேராளி என தனக்குத்தானே மகுடமும் சூட்டிக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நூலக எரிப்பிற்கு துணைபோன வரலாற்றைக் கொண்ட இந்தப் பேர்வழி, விளம்பரம் கருதியும், நட்டஈடுகளை குறிவைத்தும், தனது ஊடக நிறுவனத்தை தானே கூலிக்கு ஆட்களை வைத்துத் தாக்கி, அதை வருவோர் போவோருக்கெல்லாம் காட்டிவருகின்றனர்.

கடந்த காலங்களில் கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களது கொலைகளைச் செய்திகளாக்கி இலாபம் கண்ட இவர், அந்த ஊடகவியலாளர்களது மரண அறிவித்தல்களை தமது ஊடகத்தில் பிரசுரிப்பதற்குக்கூட பணம் வாங்கிக் கொண்டார். அந்த ஊடகவியலாளர்களைப் பற்றியும், ஊடக சுதந்திரம் பற்றியும் கதைத்து கொண்டு, தனது ஊடகம் மூலமாக மக்களுக்கு வழிகாட்டுவதாக கூறி வருகின்றார்.

இதை ஏன் நானிங்கு கூறுகின்றேன் என்றால், அந்த சப்ராகாரரின் கதையைப் போலத்தான் இருக்கிறது இன்று இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் செயற்பாடும். எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

அதாவது எமது மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து, அதை வைத்து



தென்பகுதி அரசுகளுடன் தங்களுக்கான சலுகைகளை, வரப்பிரசாதங்களை பெற்று, இறுதியில் அதே தமிழ் மக்களை விற்றுத் தின்கின்ற அளவுக்கு வந்தும், தமிழ் மக்களுக்கு வழி காட்டுகின்றோம் எனக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் பார்க்கின்றபோது, தனது ஊடகத்தின் ஊடாக அக்காலகட்டத்தில் நடந்திருந்த கொலைகளை மூடி மறைத்தும், திசை திருப்பியும், அதற்கு நியாயம் கற்பித்தும் தவறான வழிகளை மக்களுக்குக் காட்டியும், பல்வேறு அழிவுகளுக்கு துணை போயிருந்த இத்தகைய நபர்களும் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டியவர்களாவர். அவர்கள் இன்று தமிழ்த் தேசியத்தைப் போர்த்திக் கொண்டு இங்கேயும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள் – என்றார். (ஐ)

# முன்னாள் புலி உறுப்பினரை சந்தித்துள்ளார் நாலக சில்வா

## விசாரணைகளில் முக்கிய விடயங்கள் அம்பலம்

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோட்டாபாய ராஜபக்ஷ ஆகியோரை கிழக்கில் வைத்து கொலை செய்யச் சதி செய்ததாகக் கூறப்படும் விவகாரத்தில் சந்தேக நபரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா சார்பிலும் நேற்று முன்தினம் பல முக்கிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த விவகாரத்தில் முன்னாள் புலி உறுப்பினரான புஷ்பராஜை கிழக்கில் வைத்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா தரப்பு சந்தித்ததார் எனக் கூறப்படும் நிலையில், அந்தச் சந்திப்பு தொடர்பிலான தகவல்கள் நேற்று முன்தினம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் சட்டத்தரணி அஜித் பத்திரணவால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர அறிந்திருந்த நிலையிலேயே புஷ்பராஜை கிழக்கில் வைத்து நாலக சில்வா தரப்பு சந்தித்ததாகவும், கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பில் இடம்பெற்ற இரகசிய விசாரணை நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே அந்தச் சந்திப்பு இருந்ததாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி அஜித் பத்திரண சுட்டிக்காட்டினார்.

விசாரணைகளைத் தமது சேவை பெறுநரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவே முன்னெடுத்ததாகவும், அதன் அறிக்கையை அவர் பொலிஸ் மா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், அவ்வறிக்கை பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் பல பொலிஸ் மா அதிபரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தச் சந்திப்பில் புஷ்பராஜுடன் பேசப்பட்ட விடயங்கள் என்ன என்பது தொடர்பில் அச்சந்திப்பின் முழுமையான ஒலி வடிவப் பதிவை சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், அதனால் புஷ்பராஜுடன் கலந்துரையாடியதைக் கொலைச் சதிக்கான ஆதாரமாகக் காட்டுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சிரேஷ்ட சட்டத்தரணி அஜித் பத்திரண கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கிழக்கில் வைத்துக் கொலை செய்யவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸை கொழும்பில் வைத்துக் கொலை செய்யவும் சதி செய்ததாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் இடம்பெறும் வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தன.

சி.ஐ.டி. சார்பில் அதன் மனிதப் படுகொலைகள் தொடர்பிலான விசாரணை சம்பந்தமான பொலிஸ் பரிசோதகர் இக்பால் மற்றும் சார்ஜன்ட் ரத்னபிரிய ஆகியோர் மன்றில் ஆஜராகினர்.

கடந்த 6 ஆம் திகதி நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கடந்த 19 ஆம் திகதி சி.ஐ.டி.யால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட, இவ்விவகாரத்தின் சந்தேக நபரான முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவுக்கு எதிரான சாட்சியங்கள் தொடர்பான அறிக்கையை மையப்படுத்தி அவரது சட்டத்தரணி வாதங்களை முன்வைத்தார்.

அந்தச் சாட்சியங்கள் சுருக்க அறிக்கையில் 8 பிரதான காரணிகளும் 16 உப காரணிகளும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கான சான்றுகளாகக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவை அனைத்தையும் மறுத்த சட்டத்தரணி அஜித் பத்திரண அதில் எதுவும் ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றாக இல்லை என வாதிட்டார்.

தனது சேவை பெறுநரான நாலக சில்வா கைது செய்யப்பட முன்னர் சி.ஐ.டி.க்கு வழங்கிய 5 நாள் வாக்குமூலத்தை சி.ஐ.டி. ஏன் நீதிவானுக்கு சமர்ப்பிக்கவில்லை என கேள்வி எழுப்பிய அவர், அதில் அத்தனை கேள்விகளுக்குமான பதில்களும் இருக்கின்றன எனச் சுட்டிக் காட்டினார். (ஐ)

# ஜெனீவா விவகாரத்தில் மூக்கை நுழைக்கின்றார் சந்திரிகாவின் கையாள்!

## சபையில் விமல் வீரவன்ஸ பாய்ச்சல்

கொழும்பு, மார்ச் 28

திலக் மாரப்பன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தாலும், சந்திரிகாவின் கையாளான மனோ தித்தவெலதான் இலங்கை தொடர்பில் ஜெனீவா விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென ஆலோசனை கூறுகின்றார். மனோ தித்தவெல, மோசடியான முறையில் சம்பாதித்து உண்டு கொண்டு, இந்த நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்.

– இவ்வாறு சாடியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீர்வன்ஸ.

நாடாளுமன்றத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையிலுள்ள சொத்துகளை, புராதானப் பொருள்கள், இடங்களை கொள்ளையடித்துச் சென்ற பிரித்தானியா, இன்று மனித உரிமைகள் தொடர்பில் எமக்குப் பாடம் கற்பிக்க வருகின்றது.



திலக் மாரப்பன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தாலும், சந்திரிகாவின் கையாளான மனோ தித்தவெலதான் இலங்கை தொடர்பில் ஜெனீவா விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென ஆலோசனை கூறுகின்றார். மனோ தித்தவெல, மோசடியான முறையில் சம்பாதித்து உண்டு கொண்டு, இந்த நாட்டைக் காட்டிக் கொடுப்பவர். அவருக்கு, இந்த நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து தீர்மானிக்க முடியுமா?

மனோ தித்தவெல என்ற வியாபாரிக்குப் பணம் கிடைக்குமாயின் எந்தவொரு குப்பை வேலையும் செய்வார். எனவே, இவ்வாறானவர்களை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் விடயத்தில் தீர்மானங்களை எடுக்க விடவேண்டாம்.

இந்த நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை அரசைப் பாதுகாக்கும் கொள்கையாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் அரசை பழிவாங்கும், இராணுவத்தினரைப் பழிவாங்கும், வெளிநாட்டுக் கொள்கையை வைத்துக்கொண்டு, நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல முடியாது.

எந்தவோர் அரசும் தமது அரசைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும். அந்த அரசில் ஏதாவது பிரச்சினை எற்படுமாயின் அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு அரசியல் நடவடிக்கை அல்லது பாதுகாப்புத் தரப்பினரைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் நடவடிக்கை முடிவடைந்தவுடன் உலகில் பலம் பொருந்திய அரசுகள் அந்த நாட்டுக்கு எதிராக நடவடிக்கைளை மேற்கொள்ளும்போதும் இதிலிருந்து பாதுகாக்க ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும். அரசாங்கம் மாறினாலும் அரசு மாறாது.

பாதுகாப்புத் தரப்பினர் என்று கூறப்படுபவர்கள் அரசின் பாதுகாப்புத் தரப்பு என்றே கூறப்படும். இதனை அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினர் என்று கூறமாட்டோம். பாதுகாப்புத் தரப்பினர், அரசு பிரிவதைத் தடுப்பதற்காக, அரசுக்காகவே செயற்பட்டனரே தவிர, அப்போதைய அரசாங்கத்துக்காகச் செயற்படவில்லை. ஆனால், ஜெனீவாவின் இன்றைய யோசனைகளுக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளமை ஊடாக எமது இராணுவத்தினர் இலங்கை அரசின் இராணுவம் அல்ல, அப்போதைய மஹிந்த அரசாங்கத்தின் இராணுவமாக வெளிக்காட்டியுள்ளனர். – என்றார். (ஐ)

## வவுனியாவில் யானை தாக்கி 15 வயதுச் சிறுவன் மரணம்!

வவுனியா, மார்ச் 28

வவுனியா வாகல்கட, ஹெப்பற்றிக்கொலாவ பகுதிக்குள் நேற்று முன் தினம் இரவு யானை தாக்கியதில் சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்தான்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் 15 வயதுடைய சிறுவன் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை யானை தாக்கியதில் படுகாயமடைந்தான்.

கூக்குரல் சத்தம் கேட்டு ஓடிவந்த அயலவர்கள் உடனடியாக சிறுவனை ஹெப்பற்றிக்கொலாவ வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை சிறுவன் உயிரிழந்துள்ளான் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## செயற்கை மழை நிறுத்தி வைப்பு!

கொழும்பு, மார்ச் 28

செயற்கை மழையைப் பொழியச் செய்யும் திட்டத்தை இலங்கை மின்சார சபை இடைநிறுத்தி வைத்துள்ளது.

மவுஸாகலை நீர்த்தேக்கப் பிரதேசங்களில் விமானப்படையின் வை – 12 விமானத்தைப் பயன்படுத்தி செயற்கை மழைக்கான இரசாயன பதார்த்தம் தூவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதுடன், 25 நிமிடங்களுக்கு மழை பெய்ததாகவும் அதிகாரிகள் கூறியிருந்தனர்.

இந்த திட்டம் , காசல்ரீ மற்றும் மவுஸாகலை நீர்த்தேக்கப் பிரதேசங்களில் எதிர்வரும் தினங்களிலும் முன்னெடுக்கப்படும் என மின்சார சபை தெரிவித்திருந்தது. எனினும், அந்தத் திட்டத்தை மின்சார சபை திடீரென நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

அந்தப் பகுதிகளில் காணப்படும் மேகக் கூட்டங்களில் போதியளவான ஈரப்பதம் இல்லாத காரணத்தினால் இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளதாக மின்சார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈரப்பதனுடனான மேகக் கூட்டங்களை கொண்ட பகுதிகளில் ஆராய்ந்து இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்காக ஆராய்ந்து வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

## சீருடையுடன் மாணவியைக் காட்டுக்குள் அழைத்துச் சென்றவர் வசமாக சிக்கினார்!

திருமலை, மார்ச் 28

திருகோணமலை, பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியை காட்டுப்பகுதிக்குள் அழைத்து சென்ற ஓட்டோடச் சாரதியை பிரதேச வாசிகள் பிடித்து, நையப்புடைத்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

திருகோணமலை – மட்கோ, மஹாமாயபுர பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவரே பொதுமக்களிடம் மாட்டியவராவார்.

திருகோணமலை சிமெந்து தொழிற்சாலையில் வேலை செய்து வரும் இந்தச் சாரதி, பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டில் ஓட்டோவை நிறுத்தி விட்டு வேலைக்கு சென்று வந்துள்ளார். சிறுமியின் பெற்றோர்கள் வறுமையில் வாழ்வதை அவதானித்த இந்நபர் சிறு சிறு உதவிகளைச் செய்து வந்ததார் எனவும் கூறப்படுகிறது.

கடந்த திங்கள் காலை பாடசாலை சென்ற மாணவியை அந்த ஓட்டோச் சாரதி, துவரங்காடு பகுதியிலுள்ள காட்டுப்பகுதிக்குள் பாடசாலைச் சீருடையுடன் அழைத்து சென்றுள்ளார். இதனைப் பார்வையிட்ட பிரதேச மக்கள் ஓட்டோச் சாரதியை பிடித்து தாக்குதல் நடத்தியதுடன் உப்புவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சிறுமியை உப்புவெளி பொலிஸார் விசாரணை செய்து வருவதுடன், திருகோணமலை பொது வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் பரிசோதனைக்காக உட்படுத்த உள்ளதாகவும், கைது செய்யப்பட்ட 37 வயதுடைய சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். (ஐ)

# ‘கருவி’ மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாணத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை வடக்கு மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்கள் கொள்வனவு செய்வதற்கான பணிப்புரையை வழங்குவதற்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தீர்மானித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்திற்கான திடீர் கண்காணிப்பு விஜயத்தின்போது அம்மாச்சி உணவகத்தின் நுழைவாயில் பகுதியில் கருவி நிறுவனத்தின் உற்பத்திகளை விற்பனை செய்யும் மாற்றுத்திறனாளி ஒருவருரை சந்திக்கும் சந்தர்ப்பம் ஆளுநருக்கு கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையத்தின் நிர்வாகிகளை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்த ஆளுநர், இந்நிலையம் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், மாற்றுத்திறனாளிகளின் சமூக மேம்பாட்டுக்கு எவ்வித தன்நலனும் இல்லாமல் இந்நிலையம் மேற்கொண்டுவரும் சமூகப் பணிக்கு உறுதுணை வழங்குவதாக உறுதியளித்ததுடன், முதற்கட்டமாக கருவி நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை வடமாகாணத்தின் அரச நிறுவனங்கள் கொள்வனவு செய்யும் திட்டமொன்றை உடனடியாக கொண்டுவருவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் இதன்போது உறுதியளித்தார்.

அத்தோடு ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் நிதியுதவியுடன் இந்நிலையத்தின் உற்பத்தியினை விரிவுபடுத்துவதற்கான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இதன்போது உறுதியளித்தார்.

இதேவேளை தமது நிறுவனத்திற்கான அலுவலகமொன்றை அமைப்பதற்கு நிரந்தர இடமொன்றினை யாழ் நகருக்கு அண்மையில் பெற்றுத்தருமாறும் அது மாற்றுத்திறனாளிகள் இலகுவில் வந்து போவதற்கு வசதியான ஒரு இடத்தில் இருப்பதனை உறுதிப்படுத்துமாறும் அதற்கான பணத்தைத் தாமே தமது நிலையத்தினூடாக வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் கருவி நிலையத்தின் நிர்வாகிகள் ஆளுநரை கேட்டுக்கொண்டனர். மிக விரைவில் பொருத்தமான இடத்தில் அதனையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் உறுதியளித்தார். (ஐ)





# சென்னை சுப்பர் கிங்ஸ் இறுதி ஓவரில் வெற்றி!

2019 ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் டெல்லி கெப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட்களால் வெற்றியீட்டியுள்ளது.

டெல்லி பெரோா கொட்லா மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கெப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்களை பெற்றது.

அந்த அணி சார்பாக ஷிகர் தவான் 7 பவுண்டரிகளுடன் அதிகபட்சமாக 51 ஓட்டங்களை பெற்றார். பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட ரிப் பாண்ட் 13 பந்துகளில் 25 ஓட்டங்களுடன் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சென்னை அணி சாா்பில் பந்து வீச்சில் டுவைன் பிராவோ 3 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். இதன் பின்னர் வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஷேன் வொட்சன் 44 ஓட்டங்களை அதிரடியாக பெற்று அணிக்கு சிறந்த ஆரம்பத்தை வழங்கினார்.

இதன் பின்னர் சுரேஷ் ரெய்னா 30 ஓட்டங்களையும் கேதார் ஜாதவ் 27 ஓட்டங்களையும் அணித்தலைவர் மஹேந்திரசிங் தோனி ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதனால் சென்ன்ன சுப்பர் கிங்ஸ் அணி 19.4 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால் புள்ளிபட்டியலில் 4 புள்ளிகளை பெற்று சென்னை அணி முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வடக்கு மாகாண தைக்வொண்டோ போட்டியில் முல்லைத்தீவு சாதனை





முல்லைத்தீவு, மார்ச் 28
வட மாகாண ரீதியான அனைத்து மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான தைக்வொண்டோ போட்டியில் ஆண்கள் பெண்கள் இரு பிரிவிலும் முல்லைத்தீவு மாவட்டம் மாகாண ரீதியாக முதல் இடத்தைப் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாகாண மட்ட ஆண், பெண் தைக்வொண்டோ போட்டியில் ஆண்கள் பிரிவில், முல்லைத்தீவு மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்று 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் பெற்றுக்கொண்டதுடன், மன்னார் மாவட்டம் 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் பெற்றுக் கொண்டது.

மூன்றாம் இடத்தைக் கிளிநொச்சி மாவட்டம் பெற்று 2 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கத்தைப் பெற்று கொண்டது.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டம் தனதாக்கி 3 தங்கம், 2வெள்ளி, 2 வெண்கலம் பெற்றுக்கொண்டதுடன் மன்னார் மாவட்டம் 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் பெற்றுக் கொண்டது.

மூன்றாம் இடத்தை வவுனியா மாவட்டம் 1தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

(ஐ - 100)

# இறுதிக்குள் நுழைந்தது யூனியன்



*யாழ்ப்பாணம், மார்ச் 28*
*யாழ் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு டான் ரீவி நடாத்திய யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றீஸ் அணி மோதியது.*

*ஆட்ட நேர முடிவில் 04:02 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.* (ஐ)

# பரபரப்பான ஆட்டத்தில் வெற்றது குறிஞ்சிகுமரன்

*வலிகாமம் லீக்கின் அனுசரணையோடு தெல்லிப்பளை நாமகள் வி.க நடாத்தும் அணிக்கு 07 பேர் கொண்ட வடக்கின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் குப்பிளான் குறிஞ்சிகுமரன் அணியை ஊர்காவற்துறை சென்.ஜேம்ஸ் அணி மோதியது.*

*இவ் ஆட்டத்தில் 02:01 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிகுமரன் அணி வெற்றி பெற்றது.*



**இன்றைய ஐ.பி.எல் ஆட்டங்கள்**

2019 IPL

றோயல் சலஞ்சர்ஸ் VS மும்பை இந்தியன்ஸ்

இரவு 8மணி

## அதிகாரங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரத்தை மத்திக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா வடக்கின் ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஆளுநருக்குக் கடிதமொன்றை எழுதி உள்ளார். அதன் பிரதிகள் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளமையுடன், எமக்கு இருக்கும் அற்ப அதிகாரங்களையும் மீண்டும் மத்திக்குக் கையளிக்கும் வகையில் ஆளுநர் எடுக்கும் முயற்சிகளை அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் தடுக்க முன்வருமாறும் அவர்களிடம் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தாங்கள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் வேண்டுகோளின் அடிப்படையிலும் வடக்கின் 14 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்குவதற்கு முயற்சித்து வருகின்றீர்கள் என அறிகின்றேன். இந்தப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்குவது என்பது வடக்கு மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பாடசாலைகளை மத்திய அரசின் அதிகார வரம்பின் கீழ் கொண்டு வருவதற்கான ஓர் முயற்சியாகும்.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாணத்துக்கான அதிகாரப் பகிர்வு முறை அறிமுகப்படுத் தப்பட்ட போது தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாகாண சபையின் அதிகார வரம்பிற்குள் வரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, தேசிய பாடசாலைகள் என்றால் என்ன என்பதற்கு ஒரு விதமான வரைவிலக்கணமும் கொடுடபடவில்லை. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள இந்த குறைபாட்டினை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதி உட்பட பல அமைச்சர்கள் பல பாடசாலைகளைத் தான்தோன்றித்தனமாகப் தேசிய பாடசாலைகள் ஆக்கியுள்ளனர். இக் குறைபாடு அரசமைப்பு மாற்றம் தொடர்பான சகல மட்டத்திலான கலந்துரையாடல்களிலும் சுட்டிக் காட்டப்பட்டதன் விளைவாக அண்மைக் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்பதனைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

தமிழ் மக்கள் தாம் வாழும் பிரதேசங்களில் அதிகாரப் பகிர்வை வேண்டி நீண்ட காலமாக நடத்திய போராட்டங்களின் விளைவினால் ஏற்பட்ட, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டதே பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஆகும். பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான பல விடயங்கள் இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அண்மையில் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி கூட பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்ப்படுத்தப்படல் வேண்டும் என்பதனைச் சுட்டிக் காட்டி உள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து இலங்கையில் கூடிய அதிகாரப் பகிர்வுடனான அரசமைப்பு அமைய வேண்டுமென்ற அடிப்படையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்முயற்சிகளில் குறிப்பிடத்தக்கவைகளாவன சந்திரிகா அம்மையாரினால் ஒகஸ்ட் 2000 இல் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பு மாற்றத்துக்கான வரைபிலும், ஏ.பி.ஆர்.சி. என்று சொல்லப்படுகின்ற பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான குழுவினது அரசமைப்பு மாற்றத்திற்கான பரிந்துரையிலும், தற்போதைய அரசினால் ஏற்படுத்தப்பட்ட அரசமைப்பு மாற்றத்துக்கான மக்கள் கருத்தறிகுழுவின் பரிந்துரையிலும், அரசியல் நிர்ணயச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பு மாற்றத்துக்கான பரிந்துரையிலும், சகல பாடசாலைகளும் மாகாண சபையின் அதிகார வரம்பிற்குள்ளே வரவேண்டுமெனவே சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக மாகாண சபையின் அதிகாரங்களை முழுமையாக்கி மேலும் செழுமைப்படுத்தப்படவேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலில் மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறான செயற்பாட்டின மூலம் மத்தியின் நிதிப் பங்கீட்டில் மேலும் கூடிய நிதியை இந்தப் பாடசாலைகளுக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தங்கள் குறிக்கோளாக இருக்கும். ஆயின் கல்வி அமைச்சின் ஊடாக நேரடியாகத் தங்களால் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளுக்கு அந்நிதியை வழங்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும். இது ஓர் சாதாரண நிறைவேற்றுச் செயற்பாட்டின் மூலம் செயற்படுத்தக் கூடிய விடயம். கிடைத்த அற்ப அதிகாரங்களையும் மீண்டும் மத்திக்குக் கையளித்துத்தான் செயற்படுத்த வேண்டும் என்று இல்லை.

இப் பாடசாலைகள் தரமான பாடசாலைகளாக இருந்தும் ஆளுமையாக நிர்வகிக்கப்படவில்லை, அதனால் தான் மத்திக்குக்கையளிக்க வேண்டும் எனவும் அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. தங்களது நிறைவேற்றுச் செயற்பாட்டின் கீழ்தான் இப்பாடசாலைகள் உள்ளமையால். அவற்றைத் திறம்பட செயற்படவைப்பதற்கான சகல அதிகாரமும் தங்களிற்கு உள்ளதுஎன்பதனைத்தங்களிற்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த ஐந்து வருடங்களாக வட மாகாணத்தின் செயற்பாடுகள் ஆளுமையற்ற, வினைத்திறனற்றவையாக அமைந்தவை என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அது அதிகாரப் பகிர்வில் உள்ள குறைபாடு அல்ல. அதிகாரத்தில் இருந்தவர்களின் குறைபாடே ஆகும்.

ஆதலினால் மேற்படி தங்கள் முயற்சியை உடனடியாக நிறுத்த வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

## வேட்டியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுவரை நான் கூறியவை அனைத்தும் நடந்துள்ளன. நான் மனச்சாட்சிக்கு இணங்க பேசும் நபர் – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்றமை குறித்துச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த வெல்கம, வேஷ்டி – பெனியன் அணியும் நபரே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர். நாட்டை ஆட்சி செய்யும் நபர் ஜனநாயகத் தலைவராக இருக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட போகும் வேட்பாளர் யார் என்பது பற்றிய தகவல்கள. அடுத்த மே மாதத்திற்கு பின்னர் வெளியிடுவேன் – எனக் குறிப்பிட்டார்.

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வீ.ஆனந்தசங்கரி.

தாங்கள் இதுவரை செய்து வந்த அரசியலை மிகவும் அவதானமாகக் கவனித்து வந்தபடியால் சில ஆலோசனைகளைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு என்னை ஆளாக்கி விட்டீர்கள் எனக் குறிப்பிட்டு சுமந்திரனுக்குத் தாம் எழுத்தியுள்ள பகிரங்கக் கடிதத்திலேயே, மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில், ஊடகமொன்றுக்கு அளித்திருந்த செவ்வியில் வேலை வெட்டி இல்லாத இளைஞர்கள்தான் ஆயுதப் போராட்டத்தை ஆரப்பித்தார்கள் என்றும், இராணுவத்தினரைவிட அதிகளவு பொதுமக்களை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்றும் கூறியிருந்தீர்கள். அதனால் விடுதலைப் புலிகளும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கோணத்தில் கூறியிருந்தீர்கள். இது அன்றைய அரசாங்கத்துக்கும் ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது.

ஆனால், சமீபத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்றால் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லுமாறு, சர்வதேச சமூகத்தைக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை என்று இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்துவது போன்று வீறாப்பு வசனம் பேசியிருக்கின்றீர்கள்.

இதனை, 'நான் அடிப்பதைப் போன்று அடிக்கின்றேன் நீ அழுவதைப் போன்று அழு' என்று எடுத்துக் கொள்ளலாமா?

அல்லது வரப் போகின்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஞாபகமறதி அதிகம் என்பதால் இப்படிப் பேசியாவது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கான ஆரம்பம் இது என்று எடுத்துக்கொள்ளலாமா?

சரிந்து கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை நிமிர்த்துவதற்கான தூக்கி நிறுத்தும் செயற்பாடாக எடுத்துக் கொள்ளலாமா?

நீங்கள் மட்டுமல்லர், இப்போது தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபையில் அரசுக்கு எதிராகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். தேர்தல் வரப்போகின்றது, இனி என்ன தமிழரசுக் கட்சி வீர வசனம் பேச வேண்டிய நேரம்தான்.

தங்களின் உயிருக்கு ஆபத்து எனக்கூறி புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளையும் சிறைக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றீர்கள். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வெளியில் வந்து சகவாழ்வுக்குத் திரும்பி தங்கள் குடும்பத்தினருடன் வாழும் முன்னாள் போராளிகளையும் சிறையில் தள்ளும் நோக்கோடு தங்கள் சகாக்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். இந்த நிலையில், எவ்வாறு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள்?

இரு நாடுகள் செய்துகொண்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் இணைந்திருந்த வடகிழக்குப் பிரிக்கப்பட்டுள்ளதே, இருநாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒரு நாட்டின் நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது என்று ஏன் வரிந்து கட்டிக்கொண்டு நீங்கள் நீதிமன்றம் செல்லவில்லை ?

சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணை வரும்போது நீங்கள் எந்தப் பக்கத்தில் நிற்பீர்கள்? ஒரு சிலரின் பதவி ஆசையால் எமது மக்கள், முள்ளிவாய்க்கால் வரைச் சென்று பல துன்பங்களை அனுபவித்து வந்து விட்டார்கள். தயவு செய்து இனியும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாது அவர்களை வாழ விடுங்கள். – என்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார் ஆனந்தசங்கரி.

## திருக்கேதீஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்று இடம்பெற்றது.

வவுனியா இந்து ஆலயங்களின் ஒன்றியத்தால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 9 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை நிகழ்வுகளின் பின்னர் ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டம், மாலை 4 மணிவரை தொடர்ந்து நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி சபையினர், சிரேஷ்ட சட்டதரணி மு.சிற்றம்பலம், சிவசேனை அமைப்பின்தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், அந்தணர்கள், பெருமளவான பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த சிவராத்திரி தினத்தன்று ஒரு குழுவினரால் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அலங்கார வளைவு உடைக்கப்பட்டமையைகண்டித்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## திருட்டுத்தன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அது எனக்கு அறிவிக்கப்படாமல் அல்லது வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அல்லது அதன் செயலாளருக்குத் தெரியாமலேயே அவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளது. எமது நாட்டுத் தரப்பினரின் பிழையான தீர்மானங்களின் காரணமாக இடம் பெற்ற அந்த நிகழ்வு குறித்து எனது முழுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

களுத்துறை, மீகஹதென்ன பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலால் வெளியிடப்படும் அறிக்கையிலுள்ள சரியான விடயங்களை ஏற்பதற்குத் தயாராக இருக்கும் அதேவேளை, அதிலுள்ள தவறான விடயங்களை ஒருபோதும் ஏற்கமாட்டோம்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினரால் பயன்படுத்தப்பட்ட காணிகள் அவற்றின் உரிமையாளர்களுக்கு மீண்டும் விடுவிக்கப்படவில்லை என்றும், அது தொடர்பில் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள முன்மொழிவு, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள பிழையான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். அத்தகையதொரு ஆணைக்குழுவை அமைப்பதற்கு எத்தகைய தேவையும் இல்லை.

யார் என்ன கூறினாலும் இலங்கையின் அரசமைப்பின் பிரகாரமே நடவடிக்கை இடம் பெறும். அதற்கு அப்பால் எதையும் செய்யமாட்டோம் என்பதையும் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்குமாறு ஆரம்பத்திலேயே கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், அந்தக் கோரிக்கையை நான் நிராகரித்தேன். ஐ.நா. உரையில்கூட இவ்விடயத்தைச் சுட்டிக் காட்டி பேசியிருந்தேன்.

நாடொன்றின் வெளிநாட்டுக் கொள்கை, வெளிநாட்டு உறவு ஆகியன தொடர்பில் ஜனாதிபதிக்கே கூடுதல் பொறுப்பு இருக்கின்றது. எதையாவது செய்வதாக இருந்தால் முன்கூட்டியே அறிவிப்பு விடுக்கவேண்டும்.

ஆனால், ஜனாதிபதியான எனக்கோ, வெளிவிவகார அமைச்சருக்கோ அறிவிக்காமல், ஜெனீவாவிலுள்ள இலங்கைத் தூதுவர், இணை அனுசரணை வழங்கும் யோசனைக்கு பெப்ரவரி 25 ஆம் திகதி கையொப்பமிட்டுள்ளார். இதற்கு எதிர்ப்பை வெளியிடுவதுடன், அந்த யோசனையையும் நிராகரிக்கின்றேன்.

எனக்கு அறிவிக்கப்படாமல் தான் ஜெனீவாவில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இப்படிதான் பல சம்பவங்கள் நடக்கின்றன.

அதேவேளை, ஜெனீவாவுக்கு செல்லவிருந்த தூதுக்குழுவை இறுதிநேரத்தில் மாற்றியமைத்தேன். வெளிவிவகார அமைச்சர் ஜெனீவாவில் ஆற்றவிருந்த உரையிலும் திருத்தம் செய்தேன் – என்றார். (ஐ)

## இளைஞனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாடு செய்துள்ளார்.

சுழிபுரம் கிழக்கை சேர்ந்த மனோரஞ்சன் சஜிந்தன் (சுயந்தன்) என்ற இளைஞனே காணாமற் போயுள்ளார்.

இந்த இளைஞன் மறவன் புலவுப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கி இருந்து உணவகத்துக்கு வேலைக்குச் சென்று வந்துள்ளார். கடந்த 19ஆம் திகதி வேலைக்குச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என தந்தை முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ)

## தெற்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

டி.எஸ்.சேனநாயக்க காலத்திலிருந்து தற்போதுவரை தமிழ் பிரதிநிதிகள் கொழும்பில் அரசியல் செய்யும் சூழல் காணப்படுகின்றது. அவர்களுக்கு எல்லா இடத்திலும் அரசியல் செய்ய உரிமையுள்ளது.

அதேபோல், எமக்கும் நாட்டின் அனைத்து இடங்களிலும் அரசியல் செயற்பாடுகளைச் செய்ய உரிமையுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பில் கூட தேர்தல் களத்தில் நிற்க முடியும்.

ஏனெனில், இலங்கை என்பது அனைவருக்கும் உரித்தான ஒரு நாடாகும். இலங்கை தமிழ், சிங்கள, முஸ்லிம் எனப் பிரிந்த ஒரு நாடாக நான் கருதவில்லை. நாம் அனைவரும் இலங்கையர்கள்.

அரசியல் பலத்தை தீர்மானிப்பது மக்களே. எனவே, யார் வேண்டுமானாலும் அரசியல் அதிகாரத்துக்கு வரலாம். எங்கும் போட்டியிடலாம் – என்றார்.

## காணாமற்போனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கோரியுள்ளார்.

அத்துடன், இந்த 10,000 ரூபா கொடுப்பனவைச் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு, கிழக்கில் 89 ஆயிரம் விதவைகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த விதவைகளுடன் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், கணவர்களைத் தொலைத்தவர்கள் என 50000 க்கும் மேற்பட்ட பெண்கள் இருக்கின்றனர். இந்த இரு தரப்பினரையும் இணைத்து இவர்களுக்கு நிரந்தர வருமானம் கொடுக்கக்கூடிய தொழில் முயற்சிகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

சுற்றறிக்கைகளைச் சரியாகச் செயற்படுத்துமாறு வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து இராமநாதன் வீதியூடாகச் சென்ற பேரணி மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தை வந்தடைந்தது.

பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளை பாரபட்சமாக நடைமுறைப்படுத்துதல், ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு நியாயமற்ற நிபந்தனைகள் விதிப்பு, ஊழியர்கள் மீதான அச்சுறுத்தல்கள் உட்பட பல்வேறு விடயங்களை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடபோவதாகவும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகக் கல்வி சாரா ஊழியர்களும் நேற்றுப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். வவுனியா வளாகத்தின் முன்பாக கல்விசாரா ஊழியர்கள் பதாதைகளை தாங்கியவாறு கவனவீர்ப்புப் போராட்டமொன்றிலும் ஈடுபட்டனர். (ஐ)



# சீனாவை முன்னுதாரணமாக கொள்ளவேண்டும் இலங்கை

## பிரதமர் ரணில் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 28

வியட்நாம், சீனா போன்ற நாடுகளை முன்னுதாரணமாகக்கொண்டு இலங்கை செயற்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில், இலங்கை பல்வேறு செயற்பாடுகள், தொழிற்துறைகள் என்பவற்றால் ஒட்டுமொத்த உலகுக்கும் முன்னுதாரணமாக இருந்தது.

தற்போது அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. அதனையிட்டு நான் மிகவும் கவலையடைகிறேன். ஆசியாவிலுள்ள பல்வேறு நாடுகள் எம்மைவிட முன்னோக்கிச் சென்றுவிட்டன.

30 வருடகாலமாக பிரான்ஸுடனும், அமெரிக்காவுடனும் போரிட்ட வியட்நாம், கலாசாரப் புரட்சியால் பாதிக்கப்பட்ட சீனா, கொரியா போன்ற நாடுகள் தற்போது எம்மைவிட வேகமாக முன்னேறிவிட்டன.

முதலில் நாம் எம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். இதனை மேற்கொள்ளாமல் உலகத்துடன் எம்மால் போட்டியிட முடியாது.

எம்மை விடப் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட நாடுகள் முன்னோக்கிச் சென்றமையை நாம் முன்னுதாரணமாக கருதவேண்டும். அரச, தனியார் துறையில் இந்த மாற்றத்தையும் வளர்ச்சியையும் நாம் ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக, வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வர நீண்ட காலம் தேவைப்படுகிறது. இதற்கான அனுமதி தாமதப்படுத்தப்படுகிறது.

ஆனால் வியட்நாம், சீனாவில் அது இலகுவாகக் கிடைத்து விடுகிறது. இது தொடர்பாக அரசாங்கம் எனும் ரீதியில் நாம் கவனம் செலுத்தி வருகிறோம்.

இதனாலேயே, டிஜிட்டல் மயமாக்கலுக்கு நாம் முன்னுரிமை வழங்கி வருகிறோம். அரச துறையை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டில் முதலீடுகளை ஊக்குவித்து, உலகமயமாக்கலுடன் ஒன்றிணைந்து நாம் பயணிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# ஆறு மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல்!

## கூறுகிறார் லக்ஷ்மன் யாப்பா



இன்னும் 6 மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்திலிருந்தே, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தெரிவாகும் நிலை காணப்படுகின்றது.

நாட்டில் கூட்டமைப்பு அமைக்கப்படும் சந்தர்ப்பங்களில், சிறுபான்மைக் கட்சிகள், பிரதான கட்சியுடன் இணைவதே வழமை. இன்று பலமான எதிர்க்கட்சியாக நாம் இருக்கிறோம். அதனால், பொதுஜன பெரமுனவுடனேயே கூட்டமைப்போம். சின்னம் மொட்டாகவே இருக்கும்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் விரிசல் காணப்பட்டது, ஆனால் தற்போது அத்தகைய நிலை – என்றார். (ஐ)

# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 28

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் ஊழல் ஆணைக்குழுவினால் தொடரப்பட்ட வழக்கு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸ அமைச்சராக இருந்த 4 வருடங்களில் ஊதியம் மற்றும் ஏனைய வருமானங்களிலிருந்து ஈட்டமுடியாத 7 கோடி 50 இலட்சம் ரூபா நிதி மற்றும் சொத்துக்களுக்கு உரிமையாளராகக் காணப்பட்டமை தொடர்பாக அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்தி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 29ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிபதி அறிவித்தார். (ஐ)

காணி தேவை

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலை அண்டிய பகுதியில் காணி உடன் தேவை.

தொடர்புகளுக்கு: 077 585 5719

# வடக்கு நீதிமன்றங்களிலும் கைவிரல் பதிவு இயந்திரம்

## ஏப்ரலில் நடைமுறைக்கு வரும்

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் ஊழியர்களின் வருகை மற்றும் மீள்செல்கை தொடர்பான கைவிரல் பதிவு இயந்திரத்தை ஏப்ரல் முற்பகுதியில் பொருத்துமாறு நீதி அமைச்சால் வழங்கல் நிறுவனத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் கைவிரல் பதிவு இயந்திரங்கள் எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரம் பொருத்தப்பட்டு, பரீட்சார்த்தப் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என சிலோன் பிஸ்னஸ் அப்பிளிக்கன்ஸ் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஊழியர்களின் வரவு மற்றும் மீள்செல்கை கைவிரல் ரேகைப் பதிவு இயந்திரம் ஏப்ரல் மாதம் முழுவதும் பதிவு செய்யப்பட்டு மே முதலாம் திகதி தொடக்கம் உத்தியோகபூர்வமாக இயங்க வைக்கப்படும் என்றும் அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேவேளை, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களில் கைவிரல் பதிவு இயந்திரம் பொருத்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 28.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.